




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 235 07.04.2026 செவ்வாய்க்கிழமை ▸▸Chennai ▸▸Volume: 01 ▸▸Issue: 235 ▸▸Tuesday ▸▸pages 8 ▸▸Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(7-04-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-24
பிறை: தேய்பிறை
திதி
பஞ்சமி பிற்பகல் 3.50 வரை
பிறகு சஷ்டி
நட்சத்திரம்:
கேட்டை மறுநாள்
விடியற்காலை 4.54 வரை
பிறகு மூலம்.
யோகம்
சித்த/அமிர்தயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00-4.30 மணி
எமகண்டம்
காலை 9.00-10.30 மணி
சூலம் - வடக்கு.
நல்ல நேரம் :
காலை 8-9 மணி.
மாலை 5-6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | நலம் |
| மிதுனம் | புகழ் |
| கடகம் | உயர்வு |
| சிம்மம் | முயற்சி |
| கன்னி | லாபம் |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | சுகம் |
| தனுசு | பரிசு |
| மகரம் | சாந்தம் |
| கும்பம் | யோகம் |
| மீனம் | அமைதி |

# நியாயமான, சுதந்திரமான, அச்சமற்ற தேர்தல்கள்

## பிரதமர் மோடி உறுதி!

**கூச்பிகார், ஏப்.7:**

'தேர்தல் ஆணையத்தின் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது; தேர்தல்கள் நியாயமாகவும், சுதந்திரமாகவும், எவ்வித அச்சத்துக்கு இடமின்றியும் நடைபெறும்' என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதிபட தெரிவித்தார்.

தேர்தல் ஆணையத்தின் நேர்மை மீது காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சந்தேகம் எழுப்பிவரும் நிலையில், பிரதமரின் இக்கருத்துகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

294 தொகுதிகளைக் கொண்ட மேற்கு வங்கத்தில் இரு கட்டங்களாக (ஏப். 23, 29) பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. அரசியல் ரீதியில் முக்கியத்துவம் இந்த மாநிலத்தில் தனது தேர்தல் பிரசாரத்தை ஞாயிற்றுக்கிழமை தொடங்கிய பிரதமர் மோடி, கூச்பிகார் மாவட்டத்தில் பாஜக பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்றார். அப்போது, வங்கதேசத்தில் இருந்து சட்டவிரோத ஊடுருவல், பெண்களின் பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு நிலவரம், மால்டாவில் அண்மையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) நடைமுறையின்போது நீதிபதிகள் பல மணிநேரம் சிறைபிடிக்கப்பட்ட சம்பவம் உள்ளிட்டவற்றை முன்வைத்து, ஆளும் திரிணமூல் காங்கிரஸ் அரசை அவர் கடுமையாக விமர்சித்தார். பிரதமரின் உரை வருமாறு:

மால்டாவில் சில தினங்களுக்கு முன் நீதிபதிகள் எவ்வாறு சிறைபிடிக்கப்பட்டனர் என்பதை ஒட்டுமொத்த தேசமும் கண்டது. இது என்ன விதமான அரசு? இங்கு நீதிபதிகளுக்கோ, அரசமைப்புச் சட்ட நடைமுறைகளுக்கோ பாதுகாப்பில்லை.இப்படிப்பட்ட அரசின்கீழ், மாநில மக்கள் பாதுகாப்பாக இருக்க முடியுமா?

திரிணமூல் காங்கிரஸின் பெரும் காட்டாட்சிக்கு ஓர் உதாரணமே மால்டா சம்பவம். மாநிலத்தில் சட்டம்-ஒழுங்குக்கு இறுதி ஊர்வலம் நடத்துவதில்தான் குறியாக உள்ளது திரிணமூல் அரசு.

அச்சத்துக்கும்,நம்பிக்கைக்கும் போட்டி: மேற்கு வங்க பேரவைத் தேர்தலானது, திரிணமூல் காங்கிரஸால் விதைக்கப்படும் அச்சத்துக்கும், பாஜகவால் உருவாக்கப்படும் நம்பிக்கைக்கும் இடையிலான போட்டியாகும். ஒருபுறம் ஊழல்-லஞ்சத்தில் திளைத்த திரிணமூல் காங்கிரஸ், மற்றொருபுறம் வளர்ச்சியை வேகப்படுத்தும் பாஜக.




ஊருடுவல் மற்றும் வெளிநாட்டினர் குடியேற்றத்தால் சொந்த மண்ணிலேயே நமது சுதந்திரம் பறிபோய்விடுமோ என்ற அச்சம் ஒரு பக்கமும், ஊடுருவலைத் தடுத்து, அவர்களை வெளியேற்றும் பாஜகவின் நம்பிக்கை மற்றொரு பக்கமும் உள்ளது.

ஊடுருவல்காரர்களைப் பாதுகாக்க எஸ்ஐஆர், குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்க்கும் திரிணமூல் காங்கிரஸ், ஹிந்து அகதிகள் குடியுரிமை பெறுவதை விரும்பவில்லை.

திரிணமூல் ஆட்சியில் மேற்கு வங்க எல்லைப் பகுதிகளில் மக்கள்தொகை ரீதியில் அபாயகர மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இத்தகைய ஊடுருவல்காரர்களுக்கு அக்கட்சியின் நேரடிப் பாதுகாப்பு கிடைப்பது, மாநில மக்களின் உயிருக்கே அச்சுறுத்தலாகும்.

திரிணமூல் காலம் முடிந்துவிட்டது: வேலை தேடி இளைஞர்கள் இடம்பெயரும் நிலையை ஏற்படுத்தியதே திரிணமூல் அரசின் சாதனை. அவர்களின் வாக்கு வங்கி அரசியலால் மேற்கு வங்கத்தின் மகத்தான அடையாளம் மாற்றம் கண்டு வருகிறது. மாநில அடையாளத்தை மாற்ற முயல்பவர்கள் இம்முறை தூக்கியெறியப்பட வேண்டும். திரிணமூல் காங்கிரஸின் காலம் முடிவை எட்டிவிட்டது.

தேர்தல் நாளில் திரிணமூல் கட்சியினர் எவ்வளவு அச்சுறுத்த முயன்றாலும், நீங்கள் (மக்கள்) சட்டத்தின் மீதே நம்பிக்கை கொள்ள வேண்டும். தேர்தல் ஆணையம் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. தேர்தல்கள் நியாயமாகவும், சுதந்திரமாகவும், எவ்வித அச்சத்துக்கு இடமின்றியும் நடைபெறும்.

மே 4-ஆம் தேதி தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு திரிணமூல் காங்கிரஸின் ஒவ்வொரு ஊழலும், வன்முறையும் விசாரிக்கப்படும். தாங்கள் இழைத்த ஒவ்வொரு பாவத்துக்கும் பொறுப்புக் கூற செய்யப்படுவர். குற்றவாளிகள் எவ்வளவு அதிகாரமிக்கவர்களாக இருந்தாலும் நீதி நிலைநாட்டப்படும். பெண்களின் பாதுகாப்பு, கண்ணியம், உண்மையான அதிகாரம் உறுதி செய்யப்படும் என்றார் பிரதமர் மோடி.

# இந்தியாவில் அதிவேக ரயில் திட்டங்கள் - 3 புல்லட் ரயில் திட்ட அறிக்கையை முடிக்க இலக்கு

**புதுடில்லி, ஏப்.7:**



மூன்று புல்லட் ரயில் வழித் தடங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளை மார்ச் 2027-க்குள் முடிக்க ரயில்வே அமைச்சகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

இதில் ஹைதராபாத்- சென்னை, ஹைதராபாத்- பெங்களூரு மற்றும் பாட்னா- சிலிகுரி ஆகிய வழித்தடங்கள் அடங்கும். பாட்னா- சிலிகுரி புல்லட் ரயில் வழித் தடமானது வாராணசி- சிலிகுரி அதிவேக ரயில் வழித்தடத்தின் ஒரு பகுதியாகும். இந்தத் திட்டங்கள் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனால் 2026- 27 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டன.

ரயில்வே அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹைதராபாத்- சென்னை, ஹைதராபாத்- பெங்களூரு மற்றும் பாட்னா- சிலிகுரி அதிவேக ரயில் வழித் தடங்களுக்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி செப்டம்பர் 2026 முதல் மார்ச் 2027-க்குள் முடிவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. திட்ட அறிக்கைகளில் வழங்கப்பட்டுள்ள கால அட்டவணையின்படி, திட்ட அனுமதி மற்றும் ஒப்புதலுக்குப் பிறகு பணிகள் தொடங்கப்படும் என்று ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த பிப்ரவரி மாதம், மும்பை- புனே, புனே- ஹைதராபாத், சென்னை- பெங்களூரு, டெல்லி- வாராணசி மற்றும் வாராணசி-சிலிகுரி உள்ளிட்ட 7 புதிய அதிவேக ரயில் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்தும் பொறுப்பை தேசிய அதிவேக ரயில் கழகத்திடம் ரயில்வே வாரியம் ஒப்படைத்தது.

ஒவ்வொரு புல்லட் ரயில் திட்டத்துக்கும் பிரத்யேகக் குழுக்களை உருவாக்கவும், தலைமையகங்களை நிறுவவும், கட்டுமானத்துக்கு முந்தைய பணிகளின் பட்டியலைத் தயார் செய்யவும் வாரியம் உத்தரவிட்டுள்ளது.

இந்த திட்டம் செயல்பாட்டுக்கு வந்தால், ஹைதராபாத் - சென்னை பயண நேரம் 2 மணி 55 நிமிடங்களாகக் குறையும். ஹைதராபாத் - பெங்களூரு இடையிலான பயண நேரம் வெறும் 1 மணி 13 நிமிடங்களாகக் குறையும். வாராணசி - பாட்னா - சிலிகுரி இடையிலான பயண நேரம் சுமார் 2 மணி 55 நிமிடங்களாகக் குறையும்.

# சபரிமலை வழிபாட்டுக்கு எதிரான தீர்ப்பு - மறுஆய்வு மனுவை இன்று விசாரிக்கிறது

**புதுடெல்லி, ஏப்.7:**

சபரிமலை ஐயப்பன் கோயிலில் அனைத்து வயது பெண்களும் வழிபட கடந்த 2018ம் ஆண்டு வழங்கிய தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட 66 மறுஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதி ஜோய்மால்யா பக்சி அடங்கிய அமர்வு கடந்த மாதம் 16ம் தேதி விசாரித்தது.

அப்போது மறுஆய்வு மனுக்கள் மீதான விசாரணை ஏப்ரல் 7ம் தேதி தொடங்கும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி தீர்ப்பை எதிர்க்கும் தரப்பினர் வாதங்கள் ஏப்ரல் 7, 8 தேதிகளிலும், தீர்ப்புக்கு ஆதரவான மனுதாரர்களின் வாதங்கள் ஏப்ரல் 14, 16 தேதிகளிலும் கேட்கப்படும். பின்னர் இரு தரப்பிலும் விளக்க வாதங்கள் ஏப்ரல் 21ம் தேதி கேட்கப்பட்டு, ஏப்ரல் 22ம் தேதி விசாரணை நிறைவு பெறும்.

மறுஆய்வு மனுதாரர்கள் சார்பில் ஒருங்கிணைப்பு வழக்கறிஞராகக் கிருஷ்ணகுமார் சிங்கையும், மறுஆய்வு மனுக்களை எதிர்ப்போர் தரப்பில் ஒருங்கிணைப்பு வழக்கறிஞராக ஷாஷ்வதி பரியும் நியமிக்கப்பட்டனர். இந்த வழக்கில் நீதிமன்றத்துக்கு உதவ மூத்த வழக்கறிஞர்கள் கே.பரமேஷ்வர், சிவம் சிங் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் பி.வி நாகரத்தினா, எம்.எம். சுந்தரேஷ், ஏ.அமானுல்லா, அரவிந்த் குமார், ஏ.ஜி.மசி, பிபி வர்லே, ஆர் மகாதேவன், ஜோய்மால்யா பக் ஷி ஆகியோரை கொண்ட 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு இன்று முதல் விசாரிக்கிறது

# தேர்தலில் 'விஜய்' நமக்குத்தான்: மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் சுவாரஸ்யம்

**சென்னை, ஏப்.7:**

மயிலாப்பூர் பாஜக வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜன், மேலிட பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான பியூஸ் கோயல், அதிமுக, அமமுக, பாமக, தமாகா உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகளும் பங்கேற்றனர்.


கூட்டத்தில் பியூஸ் கோயல் பேசியதாவது: தமிழகத்தில் நாம் எதிர்கொள்ளும் இந்த தேர்தல் சாதாரண தேர்தல் அல்ல. இது தமிழகத்தின் விதியை, தமிழ் பண்பாட்டை மற்றும் நமது குழந்தைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகும் தேர்தல்.

தமிழகம் செழிக்க வேண்டும், ஒவ்வொரு மனிதனின் நலனும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக தேசிய ஜனநாயக கூட்டணி இணைந்து செயல்படுகிறது.

டெல்லியில் ஒரு இன்ஜின் (மத்திய அரசு), சென்னையில் ஒரு இன்ஜின் (மாநில அரசு) என 'இரட்டை இன்ஜின்' அரசு அமைந்தால், தமிழகத்தின் வளர்ச்சி இரட்டிப்பு வேகத்தில் இருக்கும். பிரதமர் மோடியின் திட்டங்கள் தமிழக மக்களை முழுமையாக சென்றடையும்.

நாம் அனைவரும் ஜெயலலிதாவுக்கு கடமைப்பட்டுள்ளோம். 2021-ல் நடந்த தவறு மீண்டும் நடக்கக்கூடாது. திமுக ஆட்சியில் ஏழை எளிய மக்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் சொல்லொண்ணாத் துயரங்களைச் சந்தித்து வருகின்றனர்.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழகம் மிக மோசமான ஊழலை சந்தித்துள்ளது. பொருளாதாரம் சீர்குலைந்து, சட்டம் ஒழுங்கு சிதைந்துவிட்டது. பழனிசாமி தலைமையிலான நல்லாட்சி அமைய வேண்டியது அவசியம்.



உதயநிதி ஸ்டாலின், ஒரு போதும் தமிழ் பண்பாட்டையோ, மக்களின் உணர்வுகளையோ மதிக்கத் தெரியாதவர். அவர் முதல்வரானால் அது தமிழகத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்தவுடன், சென்னையில் உள்ள அனைத்து குடிசைப் பகுதிகளையும் மாற்றி, அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தரமான வீடுகள் கட்டித் தரப்படும்.

நாம் அனைவரும் ஒரு குழுவாக செயல்பட்டால், இந்தத் தேர்தலில் 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்று வலுவான ஆட்சியை அமைப்போம். மக்கள் நடிகர்களைப் பார்க்க வருவார்கள், கைகாட்டுவார்கள். ஆனால் அவர்கள் ஓட்டுப் போட மாட்டார்கள்.

இதற்கு முன்பு கமல்ஹாசன் வந்தபோது அவருக்கு எத்தனை சதவீத ஓட்டு கிடைத்தது? எனவே, நடிகர்களைப் பார்த்து மக்கள் ஏமாற மாட்டார்கள். 'விஜய் நம்முடையது'. நடிகர் விஜய்யை சொல்லவில்லை. வெற்றியை சொல்கிறேன், விஜயத்தை சொல்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் தமிழிசை சவுந்தரராஜன் பேசும்போது, "2026-ல் இரட்டை இலையோடு தாமரை மலரும்.

இரட்டை இலை ஆட்சி அமைக்கும். தமிழகத்தில் பழனிசாமி ஆட்சி அமைக்கும்போது, பிரதமர் மோடியை அழைத்து சட்டப்பேரவையில் செங்கோலை நிறுவுவோம்" என்றார்.

# தேர்தலில் போட்டியிட அமைச்சர் காந்திக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கியது திமுக!

**சென்னை, ஏப்.7:**

ராணிப்பேட்டை தொகுதியில் எம்எல்ஏவாக இருக்கும் அமைச்சர் ஆர்.காந்தி 1996, 2006, 2016 , 2021ஆகிய 4 தேர்தல்களில் வெற்றி பெற்றார். 2001, 2011 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் தோல்வியை தழுவினார்.

2021 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சராக ஆர்.காந்தி பதவியேற்றார்.

இந்த நிலையில் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் ராணிப்பேட்டை தொகுதியில் மீண்டும் களம் காண அமைச்சர் ஆர்.காந்தி தயாராகி வந்தார். கட்சித் தலைமையிடம் வாய்ப்பு கேட்டு விருப்ப மனுவும் அளித்திருந்தார். இந்த சூழலில் அமைச்சர் ஆர்.காந்திக்கு பதிலாக அவரது மகன் வினோத் காந்திக்கு திமுக தலைமை போட்டியிட வாய்ப்பு அளித்தது.



இதனால் அதிர்ச்சியடைந்த அமைச்சர் ஆர்.காந்தி, தனது மகனுக்கு பதில், மீண்டும் தனக்கே போட்டியிட வாய்ப்பு வழங்க வேண்டும் என திமுக தலைமையிடம் கோரிக்கை விடுத்தார்.

சட்டப் பேரவைத் தேர்தல் ஏப். 23-இல் நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சி வேட்பாளர்கள் பிரசாரத்தில் தீவிரம் காட்டி வருகின்றனர். ஆனால் ராணிப்பேட்டை தொகுதியில் தந்தை - மகன் இடையே நிலவிய போட்டி காரணமாக தேர்தல் பணிகளில் தொய்வு ஏற்பட்டிருந்தது.

இதனால் ராணிப்பேட்டை தொகுதியில் திமுக சார்பில் வேட்பு மனு தாக்கல் செய்யப்படாத நிலை நீடித்தது. மேலும், வேட்புமனு தாக்கலுக்கு திங்கள்கிழமை (ஏப். 6) கடைசி நாள் என்ற நிலையில், திமுக மற்றும் கூட்டணிக் கட்சியினர் மத்தியில் உச்சகட்ட பரபரப்பு தொற்றிக்கொண்டது. ராணிப்பேட்டை தொகுதியின் திமுக வேட்பாளர் யார் என்பது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில், ராணிப்பேட்டை தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிட அமைச்சர் ஆர்.காந்திக்கு மீண்டும் வாய்ப்பை கட்சித் தலைமை வழங்கியுள்ளது. இதையடுத்து அவர் திங்கள்கிழமை வேட்புமனு தாக்கல் செய்யவுள்ளார்.




## சாலையோர உணவகத்தில் இரவு சாப்பிட மானாமதுரை தொகுதி பாஜக வேட்பாளர் பொன் பாலகணபதி



**சிவகங்கை, ஏப்.07:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தனி தொகுதியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் பொன் பாலகணபதி நேற்று முன்தினம் மாலை தொகுதியில் உள்ள திருப்புவனம், மானாமதுரை, இளையான்குடி ஆகிய ஒன்றியங்களில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பாஜக தொண்டர்களை சந்தித்து பேசினார்.

மானாமதுரை அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திவிட்டு இளையான்குடி பகுதியில் உள்ள சாலை கிராமம் சென்று மீண்டும் நள்ளிரவில் பஸ் நிலையத்தில் அருகே உள்ள சிறிய கடையில் இரவு உணவு அருந்தினார்.

## வள்ளுவர் முன்னேற்றக் கழகத்தினர் திமுக கூட்டணிக்கு ஆதரவு



**கிருஷ்ணகிரி.ஏப்07:** கிருஷ்ணகிரியில் திமுக மாவட்ட செயலாளர் திரு மதியழகனை சந்தித்து வள்ளுவர் முன்னேற்றக் கழகத்தினர் வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் வள்ளுவர் முன்னேற்றக் கழகத்தின் மாநில தலைவர் குமார்,செயலாளர் மருத்துவர்.சதிஷ்குமார், பொருளாளர் கலைவாணி மற்றும் வெங்கடேஷ், செந்தில், சிவக்குமார்,பார்த்திபன்,சங்கரன்,பூபாலன் உள்ளிட்ட ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துக்கொண்டனர்.

## மானாமதுரை திமுக வேட்பாளர் தமிழரசி வேட்புமனு தாக்கல் செய்தார்




**மானாமதுரை, ஏப் 07:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தனி தொகுதி திமுக வேட்பாளர் தமிழரசி மானாமதுரை சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் ராஜா சிங்கிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் காங்கிரஸ் தலைவர் ஏ ஆர்பி முருகேசன், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், ஒன்றிய செயலாளர் அண்ணா துரை ஆகியோர் உடன் இருந்தனர். வேட்புமனு தாக்கல் செய்த திமுக வேட்பாளர் தமிழரசி கூறியதாவது கடந்த ஐந்து ஆண்டுகளில் தொகுதி முழுவதும் பல்வேறு திட்டங்கள் செயல் படுத்தி மக்களின் நன்மதிப்பை பெற்றுள்ளேன். தற்போது உள்ள திமுக தேர்தல் அறிக்கை என்னை வெற்றி அடைய செய்யும். என அவர் தெரிவித்தார். மானாமதுரை நகராட்சி முன்னாள் எம்எல்ஏ மாரியப்பன் கென்னடி, திமுக நகர் செயலாளர் பொன்னுசாமி மற்றும் ஏராளமான தொண்டர்கள் நிர்வாகிகள் திமுக வேட்பாளர் தமிழரசிக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து சால்வை அணிவித்தனர்.

## பேஸ்புக், இன்ஸ்டாகிராமில் அனல் பறக்கும் டிஜிட்டல் பிரசாரம் லைக்குகள் வாக்குகளாக மாறுமா?




**சென்னை, ஏப்.07:** இந்த தேர்தலில் ஒரு பெரிய மாற்றமாக, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பெரும் பங்காற்றுகிறது. மறைந்த தலைவர்களான எம்.ஜி.ஆர், கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோரின் குரல்களையும் உருவத்தையும் ஏ.ஐ., மூலம் மீளுருவாக்கம் செய்து, அவர்கள் தற்போதைய வேட்பாளருக்கு வாக்கு கேட்பது போன்ற வீடியோக்கள் வாக்காளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன.

அதே போல் வாட்ஸ்அப் குழுக்கள் இப்போது 'டிஜிட்டல் திண்ணை 'களாக மாறிவிட்டன. தொகுதி வாரியாக ஆயிரக்கணக்கான வாட்ஸ்அப் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அதில் வேட்பாளரின் தினசரி செயல்பாடுகள், எதிர்க்கட்சியினரின் குறைகளை சுட்டிக்காட்டும் மீம்ஸ்கள் காட்டுத்தீயாக பரப்பப்படுகின்றன.

இளைஞர்கள் மற்றும் முதல்முறை வாக்காளர்களைக் கவர்வதே இந்த டிஜிட்டல் பிரசாரத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது. 30 முதல் 60 நொடிகள் கொண்ட வீடியோக்கள் மூலம் கட்சியின் சாதனைகளையும், வாக்குறுதிகளையும் மிக எளிமையாக மக்களிடம் கொண்டு சேர்க்கின்றனர்.

## 22 தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து நெல்லையில் விஜய் பிரசாரம்: செங்கோட்டையன்



**நெல்லை, ஏப்.07:** நெல்லை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் உள்ள 22 சட்டப்பேரவைத் தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து வரும் 8ஆம் தேதி தவெக தலைவர் விஜய் பிரசாரம் செய்கிறார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 22 சட்டப்பேரவைத் தொகுதி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிக்க உள்ளார். இதற்காக வரும் 8ஆம் தேதி (புதன்கிழமை) அவர் தீவிர பிரசாரம் செய்கிறார். நெல்லை மாவட்டத்தில் உள்ள கங்கைகொண்டான் மற்றும் மாநகர பகுதியில் உள்ள ராஜகோபாலபுரம் ஆகிய இரண்டு இடங்களை இந்த பிரசார கூட்டத்திற்காக கட்சி நிர்வாகிகள் தேர்வு செய்துள்ளனர்.

இந்த இடங்களை தவெக மாநில நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் அமைச்சருமான செங்கோட்டையன் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

கங்கைகொண்டான், ராஜகோபாலபுரம் ஆகிய இடங்களில் விஜய் பிரசாரம் செய்வதற்காக சுமார் 35 ஏக்கர் நிலப்பரப்பை தொண்டர்கள் தயார் செய்து வைத்துள்ளனர். அந்த இடத்தை செங்கோட்டையன் பார்வையிட்டார். அங்கு தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் நிற்பதற்கான வசதிகள், விஜய் வந்து செல்வதற்கான தனிப் பாதை உள்ளிட்ட பல்வேறு ஏற்பாடுகளை அவர் நேரில் ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, அக்கட்சியின் வேட்பாளர்களான ஆர்.எஸ். முருகன், மரியஜான் உள்ளிட்டோரிடம் செங்கோட்டையன் விஜய் பிரசாரம் குறித்து பாளை சீவலப்பேரி சாலையில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேரில் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த செங்கோட்டையன் கூறுகையில், "விஜய் பிரசாரம் செய்வதற்கான இடத்தை நாங்கள் விரைவில் இறுதி செய்வோம். இதற்காக போலீஸாரிடம் அனுமதி வாங்க உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

போலீஸார் அளிக்கும் அனுமதியைப் பொறுத்து எந்த இடம் என்பதை அதிகாரப்பூர்வமாக அறிவிப்போம்" என்றார்.

## பெரம்பூரில் விஜய் வெற்றி பெற்றால் தொகுதி மக்கள் பனையூருக்கு தான் செல்ல வேண்டும்: அன்புமணி விமர்சனம்



**சென்னை, ஏப்.07:** பெரம்பூர் தொகுதியில் விஜய் வெற்றி பெற்றால், மக்கள் பனையூருக்கு செல்ல வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி தெரிவித்தார். அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி இடம் பெற்றுள்ள பாமக சார்பில் பெரம்பூர் தொகுதியில் வேட்பாளர் திலகபாமா, அதிமுக சார்பில் ராயபுரம் தொகுதியில் வேட்பாளர் டி.ஜெயக்குமார், துறைமுகம் தொகுதியில் வேட்பாளர் மனோ, ஆர்.கே.நகர் தொகுதியில் வேட்பாளர் ஆர்.எஸ்.ராஜேஷ், எழும்பூர் தொகுதியில் வேட்பாளர் ஆர்.அபிஷேக் மற்றும் திருவிக நகர் தொகுதியில் தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

அவர்களை ஆதரித்து பாமக தலைவர் அன்புமணி பிரச்சாரம் செய்தார்.

அப்போது, அன்புமணி பேசியதாவது:

விஜயகாந்த் கட்சி தொடங்கியதே திமுகவுக்கு எதிராக தான். ஆனால், பிரேமலதா விஜயகாந்த், அவர்களுடன் சேர்ந்துள்ளார். விஜயகாந்தின் ஆன்மா அவர்களை மன்னிக்காது. திமுக கூட்டணியில் திருமாவளவன் 5 ஆண்டுகளாக வாய் பேச முடியாமல் அசிங்கப்பட்டுள்ளார்.

திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு 10 தொகுதிகளும், நீண்ட காலமாக உள்ள விசிகவுக்கு குறைந்த தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் 5 ஆண்டுகளில் ஒரு மருத்துவக் கல்லூரி கூட தொடங்கவில்லை. அமைச்சர்கள் வியாபாரிகளாக உள்ளனர்.

முதல் வியாபாரி எ.வ.வேலு. இரண்டாவது வியாபாரி சேகர் பாபு, மூன்றாவது வியாபாரி செய்தில் பாலாஜி, நான்காவது வியாபாரி கே.என்.நேரு. பெரம்பூர் தொகுதிக்கு தவெக தலைவர் விஜய் வேனில் வருவார். வேனில் செல்வார்.

திலகபாமா உங்கள் வீட்டு வாசலில் இருப்பார். அதே போன்று விஜய் வெற்றி பெற்றால், நீங்கள் பனையூர் வாசலுக்குச் செல்ல வேண்டும். திலகபாமா உங்கள் வீட்டு வாசலில் உங்களுடன் நிற்பார்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து, அம்பத்தூர், மதுரவாயல், மாதவரம், திருவள்ளூர், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஆவடி, பூந்தமல்லி ஆகிய தொகுதிகளிலும் அன்புமணி பிரச்சாரம் செய்தார்.

## விருத்தாசலத்தில் பிரேமலதா விஜயகாந்த் வேட்புமனு தாக்கல்



**விருத்தாசலம், ஏப்.07:** விருத்தாசலம் தொகுதியில் போட்டியிடும் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் இன்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள தேமுதிகவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் விருத்தாசலம் தொகுதியில் பிரேமலதா விஜயகாந்த் போட்டியிடுகிறார்.

தமிழகத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளான இன்று(ஏப். 6) முக்கிய தலைவர்கள் பலரும் வேட்புமனு தாக்கல் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் கடலூர் மாவட்டம் விருத்தாசலம் தொகுதியில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் நேற்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

பிரேமலதா கடந்த 2021 சட்டப்பேரவைத் தோதலில் இதே விருத்தாசலம் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

பிரேமலதாவின் மகன் விஜய பிரபாகர் விருதுநகரில் தொகுதியில் போட்டியிடுகிறார்.

மேலும் பல்லாவரம்- அனகை டி.முருகேசன், திருத்தணி- டி.கிருஷ்ணமூர்த்தி, ஓமலூர்- ஏ.ஆர்.இளங்கோவன், தருமபுரி- வி.இளங்கோவன், குடியாத்தம்(தனி) - கே.பி.பிரதாப், சேலம் மேற்கு- அழகாபுரம் மோகன்ராஜ், போளூர் - சரவணன், மயிலம்-வெங்கடேசன் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

## காட்பாடி தொகுதியில் போட்டியிட அமைச்சர் துரைமுருகன் வேட்புமனு தாக்கல் செய்தார்



**காட்பாடி, ஏப்.07:** தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வருகின்ற ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்ய இன்றே கடைசி நாளாகும்.

திமுகபொதுச்செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் காட்பாடி தொகுதியில் போட்டியிடுகின்றார்.

இந்தத் தொகுதியில் கடந்த 1996 முதல் தொடர்ந்து எம்.எல்.ஏ. ஆக இருந்துவரும் இவர் அதற்கு முன்னர் 1971, 1984 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளில் அங்கு போட்டியிட்டிருந்தார். இவர் ராணிப்பேட்டையில் 2 முறையும், காட்பாடியில் 9 முறையும் வெற்றி பெற்றிருந்தார்.

இந்த நிலையில், காட்பாடி தொகுதியில் 11 வது முறையாக போட்டியிடும் துரைமுருகன் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். அவரது மகன் கதிர் ஆனந்த் மற்றும் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## ஆந்திராவில் கழுதை கறி என கூறி குதிரை இறைச்சி விற்பனை- 7 பேர் கைது



**ஆந்திரா, ஏப்.07:** ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களில் கழுதை இறைச்சிக்கு அதிக தேவை உள்ளது. அதை சாப்பிடுவது உடல் நலத்திற்கு நல்லது என்று பலர் நம்புகிறார்கள்.

பல இடங்களில் கழுதை கறி விற்பனை நடந்து வருகிறது. ஆந்திர மாநிலம் பிரகாசம் மாவட்டம் ஒங்கோல் பகுதியில் கழுதை இறைச்சி என கூறி குதிரை இறைச்சியை விற்று வந்த 7 பேர் கொண்ட கும்பலை நேற்று போலீசார் கைது செய்தனர்.

3 குதிரைகள் மற்றும் இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டன. 4 ஆட்டோக்கள் மற்றும் ஒரு காரும் பறிமுதல் செய்யப்பட்டன. ஒரு கழுதையின் விலை ரூ.40,000 என்றால், ஒரு குதிரையின் விலை ரூ. 15,000 ஆகும். பந்தயத்திற்குப் பொருந்தாத கலப்பினக் குதிரைகள் செருகுப்பள்ளியில் விற்கப்படுகின்றன.

## திருமண பயணத்துக்கு முழு ரெயில் பெட்டியை முன்பதிவு செய்த குடும்பம்- ஆடல் பாடலுடன் கொண்டாடிய வீடியோ இணையத்தில் வைரல்




இந்தியாவில், திருமணங்கள் என்றாலே உறவினர்களால் நிரம்பி வழியும் வீடுகள், சடங்குகள், முழு குடும்பமும் ஒன்றாக அமர்ந்து போடும் பயணத் திட்டங்கள், பல்வேறு வகையான உணவுகள், ஆடல், பாடல் என பெரும்பாலும் சாதாரணத் தருணங்களை மறக்க முடியாத நிகழ்வுகளாக மாற்றிவிடும். பெரும்பாலான இந்திய குடும்பங்கள் பாரம்பரியம், சமூகப் பிணைப்பைப் பிரதிபலிக்கும் வகையில் பிரமாண்டமான கொண்டாட்டங்களுடனேயே திருமணங்களை நடத்த விரும்புகின்றன.

அந்த வகையில் ஒரு இந்தியக் குடும்பம் திருமணப் பயணத்திற்காக ஒரு முழு ரெயில் பெட்டியையும் முன்பதிவு செய்து பயணித்த வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. வீடியோவில், அந்த குடும்பத்தை சேர்ந்த நபர் ஒருவர் ரெயில் பெட்டி வெளியே மாலையால் அலங்காரம் செய்து விருந்தினர்களை வரவேற்கிறார். அந்தக் குடும்பத்தில் உள்ள குழந்தைகள் முதல் தாத்தா பாட்டி வரை அனைவரும், உற்சாகமான இசைக்கு நடனமாடுகின்றனர்.

## போலீஸ் அதிகாரி உதவியுடன் மகளை ஆணவக் கொலை செய்த தந்தை



**பல்நாடு,ஏப்.07:** ஆந்திர மாநிலம் பல்நாடு மாவட்டம் மாச்சர்லாவை சேர்ந்த வியாபாரி சந்திர சீனு. இவர்களது மகள் சவுடேஸ்வரி (வயது 22) நாகராஜ் என்பவரை காதலித்தார்.

அரசு ஆசிரியருடன் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில் பெற்றோர் எதிர்ப்பை மீறி சவுடேஸ்வரி வீட்டை விட்டு வெளியேறி நாகராஜை திருமணம் செய்து கொண்டார்.

மகளை காணவில்லை என்றும், வீட்டில் இருந்து 25 பவுன் தங்க நகைகளையும் காணவில்லை என்றும் போலீசில் சீனு புகார் அளித்தார்.

போலீசார் வழக்குப்பதிவு செய்து சவுடேஸ்வரியை தேடி வந்தனர். நாகராஜின் நண்பரிடம் விசாரணை நடத்தியதன் மூலம் அவர்கள் இருக்கும் இடத்தைஅறிந்து போலீசார் நாகராஜ், சவுடேஸ்வரியை கண்டுபிடித்து காவல் நிலையத்துக்கு அழைத்து வந்தனர்.

கட்டிய துணியுடன் காதில் அணிந்திருந்த கம்மலை கூட கழற்றி வைத்துவிட்டு தான் சென்றேன் என்று சவுடேஸ்வரி கூறியும் போலீசார் ஏற்றுக்கொள்ளவில்லை.

5 நாட்கள் தந்தையின் வீட்டில் தங்கிவிட்டு, கணவர் வீட்டுக்கு செல்லுமாறு போலீசார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதன்படி சவுடேஸ்வரி தந்தையுடன் சென்றார். ஆனால் கடந்த மாதம் 19ந்தேதி சவுடேஸ்வரி வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். பிரேத பரிசோதனையில், அவர் கொலை செய்யப்பட்டது தெரியவந்தது.

இது குறித்து அவருடைய தந்தைசீனுவிடம் விசாரித்தபோது, தலையணையால் அமுக்கி மகளை கொலை செய்து தற்கொலை செய்து கொண்டதாக நாடகமாடியது தெரியவந்தது.

இதனையடுத்து போலீசார் சந்திரசீனுவை கைது செய்தனர். சந்திரசீனுவிடம் பணம் வாங்கிக்கொண்டு கொலையை மறைக்க காவல்துறை அதிகாரி ஒருவர் அவருக்கு உதவியதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக உயர் அதிகரிகள் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளனர். அந்த அதிகாரி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# WANTED

வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106











































# WANTED

M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588




# WANTED


Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

# கவிதை அரங்கம்!





எண்ணமெல்லாம்
நீயாக
வண்ணவுலகில்
நான்...!

உன்னில்
தொலைந்தபின்னே
புன்னகைக்கவும்
கற்றுக்கொண்டேன்

நெற்றியில் நீ
திலகமிட
கண்ணங்களும்
சிவந்தது நாணத்தில்

விண்ணில்
உலாவரும்
நிலவாய்
என்னுள் உலாவருகின்றாய்
நீ...!

# வாழ்க்கை தத்துவம்...



உன்னை சுற்றி உள்ளவர்களை
நீ மகிழ்ச்சியாக வைத்திருக்க
விரும்பினால் முதலில் நீ
மகிழ்ச்சியாக இரு

மன அமைதி பெற
விரும்பினால் பிறர்
குறைகளைக் காணாதே
அதற்குப் பதிலாக உன்
குறைகளைக் காண்

ரொம்ப யோசிக்கவும் கூடாது
ரொம்ப நேசிக்கவும் கூடாது
இரண்டுமே ஒரு நாள்
பைத்தியமாக்கிவிடும்

வெளிப்படையாக இருந்து
விடாதே பலர் உன்னை
வெறுக்கத் தொடங்கி விடுவார்கள்

# நினைவுகள்!



சுமார் பத்து வருடங்களுக்குப் பிறகு நேற்று மாலை என் முன்னாள் காதலியிடமிருந்து ஒரு வாட்ஸ்அப் மெசேஜ் வந்தது... "பிஸியா இருக்கீங்களா? கொஞ்சம் பேசலாமா?" என் இதயம் ஒரு நிமிடம் நின்று துடித்தது. பழைய நினைவுகள் எல்லாம் நிழலாடின. உடனே பதில் அனுப்பினேன்: "பேசலாமே, சொல்லுங்க!"

அவள் போன் செய்தாள். அதே காந்தக் குரல்... "எப்படி இருக்கீங்க? வீட்ல எல்லாரும் சௌக்கியமா?"

நான் மென்மையாக: "ஆமாம், எல்லாரும் நல்லா இருக்காங்க. நீங்க எப்படி இருக்கீங்க?"

அவள்: "நான் நல்லா இருக்கேன். ஆனா உங்க ஞாபகம் அடிக்கடி வரும். நாம அன்னைக்கு பீச்ல உட்கார்ந்து பேசினது, அந்த மழையில நனைஞ்சது எதையும் மறக்க முடியல..."

எனக்கு அப்படியே புல்லரித்துவிட்டது. "நிஜமாவா சொல்றீங்க?"

அவள்: "ஆமாம்... உங்ககிட்ட ஒரு உதவி கேட்கணும்னு நினைச்சேன். பழைய பழக்கத்துல கேக்குறேன், தப்பா எடுத்துக்க மாட்டீங்களே?"

நான் ஆவலோடு: "நிச்சயமா மாட்டேன். உங்களுக்கு இல்லாத உதவியா? சொல்லுங்க, என்ன வேணும்?"

அவள்: "இல்ல... அது வந்து... ரொம்ப தயக்கமா இருக்கு!"

நான்: "பரவாயில்லை சொல்லுங்க. எதுவா இருந்தாலும் நான் செய்றேன்!"

அவள் மெதுவான குரலில்: "நீங்க இப்போவும் அதே பேங்க்லதானே வேலை செய்யுறீங்க? என் பையனுக்கு எஜுகேஷன் லோன் (Education Loan) வேணும்... கொஞ்சம் சீக்கிரம் சாங்க்ஷன் பண்ணி தருவீங்களா?"

பேங்கர்னு தெரிஞ்சா லவ் பண்ணவங்க கூட லோன் ஆபிசராதான் பாக்குறாங்க! நான்... போன அப்படியே ஸ்விட்ச் ஆஃப் பண்ணிட்டேன்!

**வெ.நாராயணன்**
லால்குடி

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*டீச்சர்:* டேய் குப்புசாமி, "ஐ லவ் யூ" (I love you)-னா என்ன அர்த்தம்?
*குப்புசாமி:* நான் உன்னைக் காதலிக்கிறேன்.
*டீச்சர்:* (கோபமாக) என்ன தைரியம் இருந்தா என்கிட்டயே இப்படிச் சொல்லுவ? போயும் போயும் என்கிட்டயேவா?
*குப்புசாமி:* ஐயோ டீச்சர்... நீங்க அர்த்தம் கேட்டீங்க, நான் சொன்னேன். அதுக்காக உடனே என்னைப் போய் லவ் பண்ணுவீங்கனு நான் எதிர்பார்க்கவே இல்லை!



# தினம் ஒரு சமையல்



## பாசிப்பருப்பு தக்காளி சூப்

**தேவையான பொருட்கள்:**

1 கப் -பாசிப்பருப்பு
1 -பெரிய வெங்காயம்
அரை டீஸ்பூன் -மஞ்சள்தூள்
1 -பச்சை மிளகாய்
தேவையானஅளவு -உப்பு
ஒரு டேபிள்ஸ்பூன் -மிளகாய்தூள்
2 -பெரிய தக்காளி
தேவையானஅளவு -தண்ணீர்
2 துண்டு -பட்டை


**அரைக்க:**

ஒரு ஸ்பூன் -மிளகு
ஒரு ஸ்பூன் -சோம்பு
அரை ஸ்பூன் -சீரகம்
2 ஸ்பூன் -எண்ணெய்
5 பல் -பூண்டு
கால் ஸ்பூன் -சோம்பு

**தாளிக்க:**

கறிவேப்பிலை
மல்லி இலை

**செய்முறை:**



முதலில் குக்கரில் பாசிப்பருப்பு, நறுக்கிய வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய், மஞ்சள்தூள், மிளகாய்த்தூள் மற்றும் உப்பு சேர்த்து 3 விசில் வரை வேகவிடவும் பிறகு சூப்பை நன்றாக மசித்து விடவும்.

அரைக்க தேவையான பொருட்களை நன்றாக அரைத்து எடுத்துக் கொள்ளவும் தாளிப்பு கரண்டியில் எண்ணெய், சோம்பு பட்டை, நட்சத்திர சோம்பு, கறிவேப்பிலை போட்டு தாளிக்கவும். பின் அரைத்த கலவையையும் சேர்த்து, வதக்கவும்.

பிறகு தாளித்ததை சூப்பில் கலந்து கொதிக்கவிடவும். சிறிது தண்ணீர் சேர்த்து கொள்ளலாம் பொடியாக நறுக்கிய மல்லி இலை தூவி இறக்கவும். சுவையான பாசிப்பருப்பு தக்காளி சூப் தயார். சூடாகவும் அருந்தலாம், சாதத்தில் ஊற்றியும் சாப்பிடலாம்.

# அகில் பயன்கள்



அகில் மரம் (AGARWOOD) வாசனை திரவியமாகவும், பல மருத்துவ குணங்கள் கொண்டதாகவும், கல்லீரல் வியாதிகள், தோல் நோய்கள் மற்றும் சுவாச கோளாறுகளை குணப்படுத்தவும் பயன்படுகிறது. இதன் நறுமண புகை மன அமைதிக்கும், வீடுகளில் நறுமணமூட்டியாகவும் (தூபம்) பயன்படுத்தப்படுகிறது. அகில் கட்டை தைலம் மூட்டு வலி மற்றும் வீக்கத்தைக் குறைக்க உதவுகிறது.

அகில் கட்டையின் முக்கிய பயன்கள்:

மருத்துவ பயன்கள்:

கல்லீரல் நலன்: அகில் கட்டையின் புகை கல்லீரல் தொடர்பான நோய்களைக் குணப்படுத்தவும், பித்த நீரைப் பெருக்கவும் உதவுகிறது.

சுவாசக் கோளாறுகள்: இதன் புகை சுவாசக் குழாயில் ஏற்படும் அழற்சி மற்றும் மூச்சுத் திணறலைச் சரிசெய்ய உதவுகிறது.

தோல் நோய்கள்: உடலில் ஏற்படும் வீக்கம் மற்றும் காயங்கள் மீது இதன் பொடியை பூசுவது அல்லது புகையிடுவது காயம் விரைவில் குணமாக உதவுகிறது.

வல நிவாரணி: அகில் தைலம் மூட்டு வலி, தொண்டை மற்றும் காது நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

# சினிமா

## தனுஷ் இல்லை.. திருவிளையாடல் ஆரம்பம் நான் நடித்திருக்க வேண்டியது: புலம்பும் ஹீரோ



நடிகர் தனுஷ் கெரியரில் முக்கிய படங்களில் ஒன்று திருவிளையாடல் ஆரம்பம். பிரகாஷ் ராஜ், ஸ்ரேயா உள்ளிட்ட பலர் நடித்து இருந்த படம் பெரிய ஹிட் ஆனது.

மற்ற மொழிகள் பலவற்றிலும் இந்த படம் ரீமேக் ஆகி இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நடிகர் பரத் அளித்த பேட்டியில் 'நான் தான் முதலில் திருவிளையிடம் ஆரம்பம் படத்தில் நடிக்க இருந்தேன். முதலில் இயக்குனர் பூபதி பாண்டியன் என்னிடம் தான் கதை சொன்னார். 'நான் சொல்றேன் சார்' என அவரிடம் கூறி இருந்தேன்.

அதற்க்கு பிறகு அவர் தனுஷுக்கு கதை சொல்லி அவர் ஓகே சொன்னதால் அவரை ஹீரோவாக வைத்து படமாக்கிவிட்டார்.

அது போல நான் நடித்த காதல் படம் தனுஷ் நடித்திருக்க வேண்டியது தான் என பரத் கூறியுள்ளார்.



இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவ்வப்போது தனது சமீபத்திய புகைப்படங்களை பதிவிடுவார். அந்த வகையில், தற்போது தன்னுடைய லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார். இதோ பாருங்க:v

## நடிகை ராஷ்மிகா கர்ப்பமா? திருமணம் ஆன ஒரே மாதத்தில் போட்ட பதிவு! உண்மை இதுதான்



நடிகை ராஷ்மிகா மந்தனா மற்றும் விஜய் தேவரகொண்டா இருவரும் கடந்த பல வருடங்களாக காதலித்து வந்த நிலையில் சமீபத்தில் பிப்ரவரி 26 ஆம் தேதி குடும்பத்தினர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டனர்.

அவர்கள் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பல முன்னணி நட்சத்திரங்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்திருந்தனர். அதனை தொடர்ந்து தாய்லாந்துக்கு இருவரும் ஜோடியாக ட்ரிப் சென்றிருந்த புகைப்படங்களும் வெளியாகி வைரலாகி இருந்தது.

அவர்கள் திருமணம் முடிந்து ஒரு மாதம் மட்டுமே ஆகும் நிலையில் தற்போது ராஷ்மிகா கர்ப்பமாக இருக்கிறார் என ஒரு செய்தி இணையத்தில் பரவி வருகிறது.

"இப்போது நாங்கள் மூன்று பேர்" என ராஷ்மிகா இன்ஸ்டாகிராமில் ஒரு பதிவை போட்டிருப்பது தான் இப்படி ஒரு செய்தி பரவுவதற்கு காரணம்.

நெட்டிசன்களும் அவர் கர்ப்பமாக இருப்பதை தான் அறிவித்திருக்கிறார் என நினைத்துக்கொண்டு கமெண்டுகளில் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் உண்மையில் அவர் கர்ப்பமாக இல்லையாம். ராஷ்மிகா இரண்டாவதாக ஒரு இன்ஸ்டாகிராம் கணக்கை வைத்திருக்கிறார். Ru என்கிற கற்பனை கதாபாத்திரத்துடன் அவர் பேசுவது போல அனிமேஷன் புகைப்படங்களை அந்த கணக்கில் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். அந்த அனிமேஷன் கதாபாத்திரம் மற்றும் விஜய் தேவரகொண்டா உடன் ராஷ்மிகா இருப்பதை தான் மூன்று பேர் என குறிப்பிட்டு அவர் போட்டோவாக பதிவிட்டு இருக்கிறார்.

இந்த பதிவு தான் அவர் கர்ப்பமாக இருப்பதாக செய்தி பரவுவதற்காக காரணமாக அமைந்து விட்டது.

# அகத்தியர் திருக்கோவில் பஞ்சேஷ்டி

ஒரு சமயம் - அகத்தியப் பெருமான் தவம் புரிந்து கொண்டிருக்கும் பொழுது, அரக்கர் வம்சத்தை சேர்ந்த "சுகேது" என்பவன் - தன் குடும்பத்தாரோடு அவர் காலில் வந்து விழுந்தான்.

அசுரர் குடும்பத்தைச் சேர்ந்த "சுகேது" எதற்காக தன் காலில் விழவேண்டும் என்று அகஸ்தியப் பெருமான், தன் ஞானக் கண்ணால் பார்த்த பொழுது, "சுகேது" மிகவும் உத்தமன் என்றும், முன் ஜென்ம கர்மவினையால் அரக்கர் குலத்தில் பிறந்தவன் என்பதையும், அசுரர் குடும்பத்தில் பிறந்தாலும் சதா சர்வ காலமும் சிவபெருமானையே வழிபட்டு வருவதால் மற்ற அசுரர்கள் சுகேதுவையும், அவன் குடும்பத்தையும் துன்புறுத்தி வருவதாக அறிந்தார்.

இந்த சுகேதுவையும், அவன் குடும்பத்தினரையும் காப்பாற்ற வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்? என்று யோசித்தார்.

யாகம் மூலமாகத்தான் சுகேதுவின் தோஷத்தை போக்கி, முக்தி கொடுக்க முடியும் என்பதை உணர்ந்த அகத்தியர், தேவயாகம், பிரம்மயாகம், பூதயாகம், பிதுர்யாகம், மானுடயாகம் என்ற ஐந்து யாகங்களை செய்ய நினைத்தார். அதே சமயம் இந்த யாகத்தை செய்யவிடாமல் அரக்கர்கள் கூட்டம் வரும். இதை எப்படித் தடுப்பது என்று நினைக்கும் பொழுது, உமையவளே அகத்தியன் முன் தோன்றினாள்!

"அகத்தியரே! உங்களது யாகம் பற்றி நான் முக்கண்ணன் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இதுவரை நேரிடையாகக் கண்டதில்லை, அந்த பாக்கியத்தை அருள வேண்டும்" என்று கருணையோடு வேண்டினாள்.

உமாதேவியே இப்படியொரு வேண்டுகோளை தன்னிடம் வைத்த பொழுது அகஸ்தியர் அகமகிழ்ந்து போனார்.

"தாயே! தேவர்களுக்கும், என்னுடைய மானிட சிஷ்யர்களுக்குமே இதுவரை யாகம் செய்து, அவர்களது தோஷத்தைப் போக்கிய நான், இன்று முதன் முறையாக நல்ல உள்ளம் கொண்டு, அன்றாடம் சிவபெருமானையே வணங்கிவரும் "சுகேது" என்னும் அரக்கர் குலத்தைச் சேர்ந்தவனுக்கும், அவனது குடும்பத்தினருக்கும் பஞ்சயாகம் ஒன்றைச் செய்ய விரும்புகிறேன். தாங்கள் சம்மதித்தால், தாங்கள் எங்கு செய்யச் சொல்கிறீர்களோ, அந்த இடத்திலே செய்ய விரும்புகிறேன்" என்றார் அகத்தியர்.

"என்ன அகத்தியரே! அரக்கனுக்கு தோஷம் போக யாகமா? அதுவும் உங்கள் கையாலா?, இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது. இப்படி செய்து கொண்டே போனால் எல்லா அரக்கர்களும் உங்கள் காலடியில் வந்து விழுந்து விடுவார்களே" என்றாள் உமையாள்.

"பகைவனுக்கே அருள்கின்ற தாங்களே இப்படிச் சொல்லலாமா? எல்லா அரக்கர்களையும் நல்லவர்களாக ஆக்கிக் காட்டுவோம்" என்றார்.

"இல்லை, அகத்தியா! கெடுதல்கள் நடக்க நடக்கத்தான் இறைபக்தி வளரும். உன்னால் எல்லா அரக்கர்களும் சொர்க்கம் அடைந்துவிட்டால், தேவலோகம் தாங்காது. கெடுதல் செய்பவர்கள் அப்படியே அவர்களது தொழிலை தப்பாது செய்யட்டும், கெடுதல் இருந்தால்தானே நன்மைக்கும் நல்லவர்களுக்கும் மரியாதை கிடைக்கும். எனவே அரக்கர்களைக் கெடுத்துவிடாதே!" என்றாள் சூசகமாக.

"தாயே! தாங்கள் சொல்வதை நானும் அறிந்தவன்தான். என்னிடம் புகலிடம் கேட்டு வந்த இந்த சுகேது, அவனது குடும்பத்தினர்க்கும் சாப விமோசனம் செய்ய தாங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லையே!"

"அகத்தியா! நீ எதை செய்தாலும் என்ன சொன்னாலும் அதற்கு ஒரு காரணம் நிச்சயம் இருக்கும். உன்னை எதிர்த்து பேச முடியுமா? இல்லை உனக்கு எதிராக யாரும் எதுவும் செய்ய முடியுமா? இதில் எனக்கு மட்டும் விதிவிலக்கு இருக்கிறதா என்ன?" என்ற உமையவள் "இப்போது உனக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்" என்றாள்.

"தாங்கள் என்னுடைய யாகத்தைப் பார்ப்பதாக விரும்பினீர்கள் அல்லவா? அதனால் இந்த சுகேதுவுக்கு ஐந்துவகை யாகங்களும் செய்யப் போகிறேன். தாங்கள் இந்த யாகம் வெற்றி பெற முக்கண்ணன் துணையோடு உதவ வேண்டும்" என்றார் அகத்தியப் பெருமான்.

எப்படி?

"இந்த யாகம் முடியும் வரை அரக்கர்களால் எந்தவிதத் தொந்தரவும் வரக்கூடாது. தாங்கள் தான் முன்னின்று காத்தருள வேண்டும். அதே சமயம் முக்கண் உருவெடுத்தும் காட்சி தரவேண்டும். ஏனெனில் இந்த பஞ்சயாகம் செய்துவிட்டு, சத்ரு சம்ஹார யாகம் ஒன்றை முருகப்பெருமான் துணையோடு செய்யப் போகிறேன்" என்றார்.



"அதென்ன சத்ரு சம்ஹார யாகம்?"

"முதன் முறையாக நானே என் கையால் செய்யப் போகும் யாகம். போட்டி, பொறாமை, எதிர்ப்பு, கொடுமை இது போன்ற தொல்லைகளால் நாள்தோறும் அவதிப்படுபவர்கள், அந்த தொல்லையிலிருந்து அகல, முருகப் பெருமானே எனக்கிட்ட கட்டளை அது. முறையோடு செய்யப் போகிறேன்" என்றார்.

"மிக்க மகிழ்ச்சி அகத்தியரே!, இதை செய்யத் தகுந்து இடம் இனிமேல் "பஞ்சேஷ்டி" என்று அழைக்கப்படும். அங்குதான், சிவபெருமான் சுயம்புவாக காட்சி அளித்திருக்கிறார். காஞ்சிபுரத்திற்கு அருகே உள்ள இந்த அருமையான இடம், பிற்காலத்தில் பெரும் புண்ணிய ஸ்தலமாக மாறவும் போகிறது" என்றாள் உமையவள், மிகவும் ஆனந்தமாக.

"தாயே, தாங்கள் என் பொருட்டு அருள்பாலிக்க முன் வந்தது மிகவும் மகிழ்ச்சி. தாங்கள் ஆனந்தமாக இதைச் சொன்னதும்என் யாகத்திற்கு துணை நிற்கப் போவதால், தங்களை இன்று முதல் "ஆனந்தவல்லித் தாயார்" என்று அழைக்க விரும்புகிறேன். தங்களுக்கு சம்மதம் தானே?"என்றார் அகத்தியர்.

"அப்படியே ஆகட்டும்" என்று ஆசிர்வதித்தாள், ஆனந்தவல்லித் தாயார்.

மிகச் சிறப்பாக அகஸ்தியர் நடத்திய அந்த யாகத்தை தடைசெய்ய வந்த அரக்கர்களை, ஆனந்தவல்லித் தாயார் தன் இடது காலை முன் வைத்து, தன் முக்கண்ணினால் சம்ஹாரம் செய்தாள். அகஸ்தியர் ஐந்து யாகத்தையும், கடைசியாக சத்ரு சம்ஹார யாகத்தையும் வெற்றிகரமாக முடித்தார். சுகேதுவும் அவனது குடும்பத்தினர்களும், சாப விமோசனம் பெற்றனர். உமையவளும் ஆனந்தவல்லித் தாயாராக அருள் பொங்க, இடது காலை முன்வைத்து மகிழ்ச்சியாக காட்சி தருகிறாள்.

இந்த கோவில் சென்னையிலிருந்து 28 கிலோ மீட்டர் தொலைவில் கல்கத்தா நெடுஞ்சாலையில், ரெட்ஹில்ஸ் பக்கத்தில் அமைந்திருக்கிறது.மிக பழமையான கோவில், ராஜகோபுரத்தில் வைணவப் பெருமையை காட்டும் தசாவதார காட்சிகள் அழகுப் பட ஒரு பக்கமும், அதற்கு நேர் எதிரில் சைவப் தெய்வக் காட்சிகளும் சரிக்கு சரிசமமாக வடிக்கப்பட்டிருக்கிறது. நவக்ரகங்கள் இங்கு நேர் வரிசையாக இருப்பதையும், அதில், சனீச்வரனுக்கு காக்கை வாகனத்திற்குப் பதிலாக கருடவாகனம் இருப்பதையும் காணலாம். இது சற்று வித்யாசமாக இருக்கும்.

கோயிலுக்கு இடதுபுறம் மிகப் பெரிய குளம் இருக்கிறது. இது அகஸ்தியர் உமிழ்நீரால் தோன்றியது என புராணங்கள் கூறுகின்றது. ஆனால் அகத்தியர் ஜீவநாடியில் இது பற்றி கேட்ட பொழுது, யாகம் முடித்த கையை அலம்புவதற்கு அகத்தியர் கமண்டலத்திலிருந்து, கங்கை அவளே நீராக வந்து, அகத்தியர் கையை அலம்ப, உருவெடுத்ததாக வந்திருக்கிறது.

சத்ரு சம்ஹார யாகம் செய்ய, இதைவிட மிகச்சிறந்த கோவில் வேறு எங்கும் இருப்பதாக தெரியவில்லை. இது சென்னை நகரவாசிகளுக்கு மட்டுமல்ல, அனைத்து சிவபக்தர்களுக்கும் ஒரு வரப்ரசாதமான புண்ணிய ஸ்தலம்."யாருக்கு விதி இருக்கிறதோ, யார் கர்மாவில் அதற்கு அனுமதி இருக்கிறதோ, அவர்கள இங்கு வரட்டும், வந்தெனது அருள் பெறட்டும்" என்றார் அகத்தியர்.

தினம் ஒரு தலைவர்கள்

# சாரு மஜும்தார் வரலாறு

சாரு மஜும்தார் (15 மே 1918 - 28 ஜூலை 1972) ஒரு இந்திய கம்யூனிஸ்ட் தலைவரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) நிறுவனர் மற்றும் பொதுச் செயலாளருமாவார் . 1918 இல் சிலிகுரியில் ஒரு முற்போக்கான நில உரிமையாளர் குடும்பத்தில் பிறந்த இவர், இந்திய சுதந்திர இயக்கத்தின் போது ஒரு கம்யூனிஸ்டாக மாறி , பின்னர் நக்சலிசத்தை உருவாக்கினார் . இந்த காலகட்டத்தில், 1967 நக்சல்பாரி எழுச்சியின் வரலாற்றுக் கணக்குகளை அவர் எழுதினார் . அவரது எழுத்துக்கள், குறிப்பாக வரலாற்று எட்டு ஆவணங்கள் , இந்தியாவில் உள்ள பல கம்யூனிச-இணைந்த அரசியல் கட்சிகளின் சித்தாந்தத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டன.

வாழ்க்கை வரலாறு

மஜும்தார் ராஜ்ஷாஹியின் (இப்போது சிலிகுரி) மதுலலோபியில் ஒரு ஜமீன்தார் குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை பிரேஷ்வர் மஜும்தார் ஒரு சுதந்திரப் போராட்ட வீரராகவும் , இந்திய சுதந்திர இயக்கத்தின் போது இந்திய தேசிய காங்கிரஸின் டார்ஜிலிங் மாவட்டக் குழுவின் தலைவராகவும் இருந்தார் .

1930 ஆம் ஆண்டில், சிலிகுரியில் ஒரு மாணவராக, சேவமங்கல் சிங் மற்றும் ப்ரோஜென் பாசு ராய் சவுத்ரி ஆகியோரின் வேண்டுகோளின் பேரில், காலனித்துவ எதிர்ப்பு அமைப்பான அனுஷிலன் சமிதியுடன் இணைக்கப்பட்ட அனைத்து வங்காள மாணவர் சங்கத்தில் சேர்ந்தார்.

1937 ஆம் ஆண்டு தனது 'மெட்ரிக்' தேர்வில் முதல் பிரிவில் பட்டம் பெற்ற மஜும்தார், பப்னா மாவட்டத்தில் (இன்றைய வங்காளதேசம்) உள்ள எட்வர்ட் கல்லூரியில் சேர்ந்தார். இருப்பினும், சிறிது காலத்திற்குப் பிறகு, சுதந்திர இயக்கத்தில் சேருவதற்காக, தனது முறையான கல்வியை விட்டுவிட்டு, சிலிகுரிக்குத் திரும்பினார். 1938 ஆம் ஆண்டு, தனது 19 வயதில், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். அடுத்த ஆண்டு, அண்டை நாடான ஜல்பைகுரி மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) ஒழுங்கமைக்கப்பட்டபோது , மஜும்தார் அப்போது தடைசெய்யப்பட்ட கட்சியில் சேர்ந்து அதன் விவசாயிகள் முன்னணியில் பணியாற்றினார். விரைவில் ஒரு கைது வாரண்ட் அவரை முதல் முறையாக ஒரு கம்யூனிஸ்ட் ஆர்வலராக தலைமறைவாகச் செல்ல கட்டாயப்படுத்தியது. இரண்டாம் உலகப் போர் வெடித்தபோது CPI தடைசெய்யப்பட்டாலும், அவர் விவசாயிகள் மத்தியில் CPI நடவடிக்கைகளைத் தொடர்ந்தார், மேலும் 1942 இல் CPI ஜல்பைகுரி மாவட்டக் குழுவில் உறுப்பினரானார். 1943 ஆம் ஆண்டு பெரும் பஞ்சத்தின் போது ஜல்பைகுரியில் 'பயிர்களைக் கைப்பற்றுதல்' பிரச்சாரத்தை ஏற்பாடு செய்ய இந்த பதவி உயர்வு அவருக்கு தைரியத்தை அளித்தது . 1946 ஆம் ஆண்டில், அவர் ஜல்பைகுரி பகுதியில் தேபாகா இயக்கத்தில் சேர்ந்து வடக்கு வங்காளத்தில் பாட்டாளி வர்க்க போர்க்குணமிக்க போராட்டத்தைத் தொடங்கினார். இந்தப் போராட்டம் அவரது புரட்சிகரப் போராட்டக் கண்ணோட்டத்தை வடிவமைத்தது. பின்னர் அவர் டார்ஜிலிங்கில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பணியாற்றினார் .



1948 ஆம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது, அடுத்த மூன்று ஆண்டுகள் அவர் சிறையில் கழித்தார். ஜனவரி 1952 இல் அவர் ஜல்பைகுரியைச் சேர்ந்த சக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான லீலா மஜும்தார் சென்குப்தாவை மணந்தார். இந்த ஜோடி சிலிகுரிக்கு குடிபெயர்ந்தது, இது சில ஆண்டுகள் மஜும்தாரின் நடவடிக்கைகளின் மையமாக இருந்தது. அவர் 1962 இல் சிறிது காலம் சிறையில் அடைக்கப்பட்டார். 1960களின் நடுப்பகுதியில், வடக்கு வங்காளத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) (CPI(M)) இல் மஜும்தார் ஒரு இடதுசாரிப் பிரிவை ஏற்பாடு செய்தார். 1967 ஆம் ஆண்டில், நக்சல்பாரியில் அவரது தோழர் கனு சன்யால் தலைமையில் ஒரு போர்க்குணமிக்க விவசாயிகள் எழுச்சி நடந்தது. இந்தக் குழு பின்னர் நக்சலைட்டுகள் என்று அழைக்கப்பட்டது , மேலும் இந்த நேரத்தில் அவர் எழுதிய எட்டு கட்டுரைகள் - வரலாற்று எட்டு ஆவணங்கள் என்று அழைக்கப்பட்டன - அவற்றின் சித்தாந்த அடித்தளத்தை வழங்குவதாகக் கருதப்படுகிறது. புரட்சி சீன கம்யூனிஸ்ட் புரட்சியின் வடிவத்தில் ஆயுதப் போராட்டத்தின் பாதையை எடுக்க வேண்டும் என்றும் , நக்சல்பாரியில் நடந்த எழுச்சி ஒரு மாவோயிஸ்ட் புரட்சியின் தொடக்கமாகும் என்றும் மஜும்தார் வாதிட்டார். தலைவர் மாவோ சேதுங்கின் மேற்கோள்களுக்கு மஜும்தார் அதிக முக்கியத்துவம் கொடுத்தார் , இது படிப்பறிவற்ற விவசாயிகளுக்கு சத்தமாக வாசிக்கப்பட வேண்டும் என்று கோரியது. புரட்சிகர அறிவுஜீவிகள், இளைஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இடையே ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கான ஒரு முக்கியமான வழிமுறையாக மஜும்தார் மேற்கோள்களைக் கருதினார். மஜும்தாரால் வலியுறுத்தப்பட்ட பிற நூல்களில் லின் பியாவோவின் மக்கள் போரின் வெற்றி நீண்ட காலம் வாழ்க , மற்றும் தொடர்ந்து படிக்கும் மூன்று கட்டுரைகள் ( இன் மெமரி ஆஃப் நார்மன் பெத்துன் , சர்வ் தி பீப்பிள் , மற்றும் தி ஃபூலிஷ் ஓல்ட் மேன் ரிமூவ்ஸ் தி மவுண்டன்ஸ் ஆகியவற்றின் தொகுப்பு ) ஆகியவை அடங்கும்.

1967 ஆம் ஆண்டு நக்சல்பாரி எழுச்சி நசுக்கப்பட்டபோது , மஜும்தார் கூறினார்: "... நூற்றுக்கணக்கான நக்சல்பாரி இந்தியாவில் புகைந்து கொண்டிருக்கிறது....நக்சல்பாரி இறக்கவில்லை, இறக்கவும் போவதில்லை". அதே ஆண்டு, மஜும்தார் பிரிந்து சென்று கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் அகில இந்திய ஒருங்கிணைப்புக் குழுவை உருவாக்கினார் . 1969 ஆம் ஆண்டு, மஜும்தாரும் மற்றவர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) ஐ நிறுவினர் .

இறப்பு

மஜும்தார் ஜூலை 16, 1972 அன்று கைது செய்யப்பட்டார். மஜும்தாரின் மரணத்திற்கான சூழ்நிலைகள் தெளிவாக இல்லை. ஜூலை 28, 1972 அன்று அதிகாலை 4 மணிக்கு மஜும்தார் மாரடைப்பால் இறந்தார் என்பது காவல்துறையின் அதிகாரப்பூர்வ பதிலாகும். இருப்பினும், அனைத்து நக்சலைட் பிரிவுகளும் இதை மறுத்தன, மாறாக இது ஒரு காவல் கொலை என்றும், போலீஸ் லாக்கில் மருந்து வழங்கப்படாததால் அவர் கொல்லப்பட்டார் என்றும் கூறின. அவரது உடல் ஆயுதமேந்திய போலீசார் மற்றும் துணை ராணுவப் படைகளின் கண்காணிப்பில் கியோரடோலா தகனக்கூடத்தில் தகனம் செய்யப்பட்டது .

மஜும்தாரின் மரணத்திற்குப் பிறகு இந்தியாவில் தீவிர இடதுசாரி இயக்கம் பல சித்தாந்தப் பிளவுகளைக் கண்டுள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) விடுதலை மஜும்தாரின் மரணத்தின் ஆண்டு நிறைவை தியாகிகள் தினமாகக் கொண்டாடுகிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) ஜூலை கடைசி வாரத்தில் மஜும்தாரின் மரணத்தை நினைவுகூரும் வகையில் தியாகிகள் வாரத்தைக் கொண்டாடுகிறது, அங்கு உறுப்பினர்கள் அவரது சித்தாந்தத்தை மறுபரிசீலனை செய்து தங்கள் இயக்கத்தில் அவர் ஏற்படுத்திய செல்வாக்கை நினைவுகூர்கிறார்கள்.

## நடுக்கடலில் அமைந்துள்ள ஓ.என்.ஜி.சி. எண்ணெய் கிணற்றில் தீ- 10 ஊழியர்கள் காயம்

**மும்பை, ஏப்.7:**


மும்பை கடற்கரையில் இருந்து சுமார் 99 மைல் தொலைவில் அரபிக்கடலில் ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தின் எண்ணெய் கிணறு அமைந்துள்ளது. இங்கு எண்ணெய் மற்றும் எரிவாயு எடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்கு நேற்று முன்தினம் மாலை 5.30 மணி அளவில் திடீரென தீப்பிடித்தது. கரும்புகை சூழ்ந்ததால் அங்கிருந்த ஊழியர்கள் அலறியடித்து ஓடினர். தகவல் அறிந்ததும் அங்கு பணியில் இருந்த பாதுகாப்பு ஊழியர்கள் உடனடியாக களத்தில் இறங்கினர். நவீன கருவிகள் மூலம் தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். சில நிமிடங்களிலேயே தீ முழுமையாக அணைக்கப்பட்டது. இதனால் பெரும் விபத்து மற்றும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

இருப்பினும், இந்த தீ விபத்தில் சிக்கி அங்கிருந்த 10 ஊழியர்களுக்கு லேசான தீக்காயங்கள் ஏற்பட்டன. அவர்களுக்கு அங்கேயே முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மேல்சிகிச்சைக்காக ஹெலிகாப்டர் மூலம் அவர்கள் மும்பைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த கடலோர காவல்படையினர், ஓ.என்.ஜி.சி. அதிகாரிகளை தொடர்பு கொண்டு விசாரணை நடத்தினர். தற்போது நிலைமை முற்றிலும் கட்டுக்குள் இருப்பதாகவும், அச்சப்படும் வகையில் அவசர நிலை எதுவும் இல்லை என்றும் அந்த நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது. இந்த விபத்து குறித்து உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## மேற்காசிய போரால் இந்திய பொருளாதார வளர்ச்சி 6%ஆக குறையும்! மூடீஸ் ஆய்வு நிறுவனம் கணிப்பு!

**திருவனந்தபுரம், ஏப்.7:**




மேற்காசிய போரால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6 சதவீதமாகக் குறையும் என்று மூடீஸ் ஆய்வு நிறுவனம் கணித்துள்ளது. முன்னதாக பொருளாதார வளர்ச்சி 6.8 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டிருந்தது.

இது தவிர இந்தப் போர் பல்வேறு பொருள்கள், சேவைகளின் விலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும், எனவே பணவீக்கமும் சற்று அதிகரிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மூடீஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

மேற்காசிய போரால் சமையல் எரிவாயு (எல்பிஜி) கடல்வழியாக வருவதில் பிரச்னை ஏற்பட்டுள்ளது. அதன் விலையும் உயர்ந்துள்ளது. இது உணவுப் பொருள் தயாரிப்பு தொடங்கி பல்வேறு விலைகளில் எதிரொலிக்கும். மேலும், இந்தியா பெருமளவில் உரத் தேவையை இறக்குமதி மூலம் எதிர்கொள்கிறது. இதிலும் போரின் தாக்கம் வலுவாக உள்ளது.

சுமார் ஒரு மாதத்துக்கு மேல் நீடித்துவரும் போா இன்னும் முடிவுக்கு வராத சூழலில், நாட்டின் பொருளாதாரத்தில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும். உற்பத்திச் செலவு அதிகரிப்பைக் காரணமாக வைத்து ஏற்படும் விலைவாசி உயாவு என்பது மக்களின் நுகர்விலும் பாதிப்பை ஏற்படுத்தும். இதன் தொடர் விளைவு உற்பத்தியையும் பாதிக்க வாய்ப்புள்ளது.

எனவே, 2026-27-இல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6 சதவீதமாக குறையும். இதற்கு முன்பு 6.8 சதவீதமாக கணிக்கப்பட்டிருந்தது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பிப்ரவரி 28-இல் ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் ராணுவத் தாக்குதலை தொடங்கியதில் இருந்து இப்போது வரை கச்சா எண்ணெய் விலை 50 சதவீதம் உயர்ந்துள்ளது.

இதையடுத்து, இந்திய எண்ணெய் நிறுவனங்கள் கடும் இழப்பை எதிர்கொண்டுள்ள சூழலில், கடந்த மாத இறுதியில் டீசல் மீதான ரூ.10 கலால் வரி முழுமையாக நீக்கப்பட்டது. பெட்ரோல் மீதும் கலால் வரி ரூ.10 குறைக்கப்பட்டது.

சீனா, பாகிஸ்தான், இலங்கை உள்பட பல்வேறு நாடுகள் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்திய நிலையில் இந்தியாவில் மட்டும் விலை உயாத்தப்படவில்லை. அதே நேரத்தில் எரிவாயு விலை மட்டும் உயர்த்தப்பட்டது.

## 400 ரூபாய் கடனுக்காக இளைஞர் கொலை: டெல்லியில் சிறுவர்கள் செய்த கொடூரம்

**புதுடெல்லி, ஏப்.7:**

வடகிழக்கு டெல்லியின் தயால்பூர் பகுதியில் உள்ள நியூ முஸ்தபாபாத் பகுதியை சேர்ந்த முகமது கைப் (26) வாழ்ந்து வந்தார். மேலும் இவர் பழைய பொருட்களை சேகரிக்கும் தொழில் செய்து வந்தார். இந்த நிலையில் அதே பகுதியில் உள்ள சிறுவர்களிடம் ரூ. 400 கடன் வாங்கியிருந்ததாகவும், அதை நீண்ட நாட்களாக திருப்பி தராமல் இருந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை, கைப் தனது வேலையை முடித்துவிட்டு திரும்பி கொண்டிருந்தபோது, அந்த சிறுவர்கள் மறித்தனார். மேலும் எங்கள் பணத்தை இப்போதே கொடு என அவர்கள் மிரட்டினர். இதனை தொடர்ந்து கைப் தன்னிடம் இப்போது பணம் இல்லை என்றும், இன்னும் சில நாட்களில் தந்துவிடுவதாகவும் கூறியதாக தெரிகிறது. வெறும் 400 ரூபாய்க்காக தொடங்கிய அந்த வாக்குவாதம், திடீரென வன்முறையாக மாறியது.

எதிர்பாராத நேரத்தில், சிறுவர்கள் மறைத்து வைத்திருந்த கத்தியால் கைப்பை சரமாரியாக குத்தினார். இந்த தாக்குதலில் கைப் ரத்த வெள்ளத்தில் கீழே விழுந்தார். சிறுவர்கள் அங்கிருந்து தப்பியோடினர். அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு ஜேபிசி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அப்போது கைப்யை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறினர்.

இதனை தொடர்ந்து தயால்பூர் போலீஸார் வழக்கு பதிவு செய்து, சுமார் 16 வயதுடைய அந்த மூன்று சிறுவர்களையும் நேற்று காலை கைது செய்தனர். மேலும் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட மூன்று கத்திகள் பறிமுதல் செய்ததாக போலீசார் தெரிவித்தனர். அண்மையில் வெளியான பாலிவுட் திரைப்படம் ஒன்றின் தாக்கத்தால் இந்த சம்பவத்தில் சிறுவர்கள் ஈடுபட்டதாக போலீசார் தெரிவித்தனர் மேலும் இந்த கொலை சம்பவத்தை அந்த சிறுவர்கள் தங்கள் மொபைலில் வீடியோ எடுத்து, அதை சமூக வலைதளங்களில் பதிவேற்றியுள்ளனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## கடந்த 2 வாரங்களில் நாடு முழுவதும் 6.6 லட்சம் 5கிலோ சிலிண்டர் விற்பனை

**புதுடெல்லி, ஏப்.7:**



ஹோர்முஸ் நீரிணையில் சரக்குக் கப்பல்கள் பயணிப்பதில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளபோதிலும் எல்பிஜி சமையல் எரிவாயு தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படுவதாகவும் மத்திய எண்ணெய் அமைச்சகம் தெரிவித்தது. இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

மார்ச் 23-ஆம் தேதியில் இருந்து எல்பிஜி சமையல் எரிவாயு மையங்களில் 6.6 லட்சம் சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு சராசரியாக 51 லட்சம் 14.2 கிலோ எல்பிஜி சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதில் 95 சதவீதம் இணைய வழியில் முன்பதிவு செய்யப்படுகிறது.

சிலிண்டர்களை பதுக்கும் விநியோக மையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. கடந்த மார்ச் மாதத்தில் இருந்து 50,000 சிலிண்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 1,400 எல்பிஜி சமையல் எரிவாயு விநியோக மையங்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு 36 விற்பனையாளர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் நாட்டில் வீடுகளுக்குப் பயன்படுத்தப்படும் எல்பிஜி சமையல் எரிவாயு தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ.70 லட்சம் மருந்துகள் திருட்டு: டெல்லியில் 5 பேர் கைது

**புதுடெல்லி, ஏப்.7:**

அரசு மருத்துவனைகளில் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டிய மருந்துகளைத் திருடி, சட்டவிரோதமாக வெளிச் சந்தையில் விற்பனை செய்து வந்த 5 பேர் கொண்ட கும்பலை டெல்லி காவல் துறையின் குற்றப்பிரிவு போலீஸார் அதிரடியாக கைது செய்தனர்.

டெல்லி தீஸ் ஹசாரி பகுதியில் உள்ள 'ஜெய் பாரத் டிரான்ஸ்போர்ட்' வளாகத்தில் டெம்போ மற்றும் சொகுசு காரில் அரசு மருந்துகளை கடத்த முயன்ற மருந்தாளுநர் பினேஷ் குமார் உட்பட 5 பேரை போலீஸார் கைது செய்து விசாரிக்கின்றனர்.

## ஏப்.10-ல் மாநிலங்களவை எம்.பி. ஆகிறார் நிதிஷ் - பிஹாருக்கான புதிய முதல்வர் யார்?

**பாட்னா, ஏப்.7:**

பிஹார் மாநில முதல்வர் நிதிஷ்குமார் மாநிலங்களவைக்குத் தேர்வு செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து பிஹாருக்கான அடுத்த முதல்வர் யார் என்று இதுவரை அறிவிக்கப்படவில்லை. இதனால் நிதிஷும் தனது பதவியை ராஜினாமா செய்யவில்லை.

இந்நிலையில் தனது பிஹார் மாநில சட்ட மேலவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ள நிதிஷ்குமார், விரைவில் முதல்வர் பதவியிலிருந்தும் விலகவுள்ளார். மேலும் அவர் வரும் 10ம் தேதி மாநிலங்களவை எம்.பி.யாக பதவியேற்க உள்ளார் என்று பிஹார் மாநில பாஜக தலைவர் சஞ்சய் சரோகி நேற்று தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து பிஹாரின் புதிய முதல்வராக கூட்டணிக் கட்சியான பாஜகவைச் சேர்ந்த ஒருவர் முதல்வராக பொறுப்பேற்பார் என என்டிஏ வட்டாரங்கள் தெரிவித்தன. புதிய முதல்வர் யார் என்பதை என்டிஏ கூட்டணி முடிவு செய்யவுள்ளது. புதிய முதல்வரைத் தேர்வு செய்யும் குழுவில் நிதிஷ்குமாரும் இருப்பார். மேலும் நிதிஷ்குமாரின் மகன் நிஷாந்த் குமாருக்கு துணை முதல்வர் பதவி வழங்கப்படலாம் எனத் தெரிகிறது. இதனிடையே வரும் 8-ம் தேதி அமைச்சரவைக் கூட்டத்தை முதல்வர் நிதிஷ்குமார் கூட்டியுள்ளார். அதைத் தொடர்ந்து அவர் டெல்லிக்கு செல்வார் என்றும் தெரியவந்துள்ளது. 2-வது வாரத்தில் புதிய முதல்வர் பதவியேற்பு விழா நடைபெறும் எனத் தெரிகிறது.

பிஹாரில் கடந்த 2025-ல் நடைபெற்ற பேரவைத் தேர்தலில் என்டிஏ கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றது. இதையடுத்து ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவரான நிதிஷ்குமார் பிஹாரின் முதல்வராக 10-வது முறையாக பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## "காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் பெண்கள் தொழில் தொடங்க ரூ.50,000" - அசாமில் ராகுல் வாக்குறுதி

**விஸ்வநாத், ஏப்.7:**

அசாம் மாநிலத்தின் விஸ்வநாத் நகரில் நடைபெற்ற காங்கிரஸ் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி பங்கேற்று பேசியதாவது: அசாம் மாநில நலன், தேயிலை தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம், மக்களுக்கு எஸ்டி அந்தஸ்து போன்ற வாக்குறுதிகளை பாஜக அரசு நிறைவேற்றவில்லை.

முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா மற்றும் பாஜகவினர் மக்களை பிரித்து ஊழலில் ஈடுபடுகின்றனர். இந்தியாவில் அதிகமாக ஊழல் செய்யும் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மாதான். அவர் பொறுப்பற்ற கருத்துக்களை தெரிவித்து மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி வருகிறார்.

அசாம் தலைவர்கள் ஸ்ரீமந்த சங்கர்தேவ், கோபிநாத் பர்தோலாய், பூபென் ஹசாரிகா, அசன் பிர், ஜுபின் கார்க் போன்ற தலைவர்கள் எல்லாம் மக்களிடையே வெறுப்பை பரப்பவில்லை. அவர்கள் மக்களை ஒன்றிணைக்க பணியாற்றினர். காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் மக்களை ஒன்றிணைத்து மாநிலத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தும். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் 6 பிரிவினருக்கு எஸ்.டி. அந்தஸ்து வழங்கும். தேயிலை தொழிலாளர்களுக்கு ரூ.450 தினக்கூலி வழங்குவோம். பெண்களின் வங்கி கணக்கில் மாதந்தோறும் நிதியுதவி அளிக்கப்படும். பெண்கள் தொழில் தொடங்க ரூ.50,000 வழங்குவோம். அனைத்து குடும்பத்துக்கும் ரூ.25 லட்சம் மதிப்பில் சுகாதார காப்பீடு வழங்குவோம். முதியோர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,250 உதவித் தொகை வழங்குவோம். இவ்வாறு ராகுல் கூறினார்.

## ஹரியானாவில் தலைக்கவசம் அணியாத 19,603 வாகன ஓட்டிகள்: மார்ச் மாதம் மட்டும் ரூ.1.9 கோடி வசூலித்த காவலர்!

**குருகிராம், ஏப்.7:**

தலைக்கவசம் அணியாமல் இருசக்கர வாகனம் ஓட்டி சென்றவர்களிடம் மார்ச் மாதத்தில் ரூ.1.9 கோடியை வசூலித்துள்ளார் போக்குவரத்துக் காவலர்.

ஹரியானா மாநிலத்தில் ஏற்படும் பெரும்பாலான விபத்துகளில் உயிரிழப்பு அல்லது காயங்கள் ஏற்படுவதற்கு தலைக்கவசம் அணியாததே காரணமாக உள்ளது. இதையடுத்து மாநிலம் முழுவதும் சாலை போக்குவரத்து விதிமுறைகள் குறித்தும் பாதுகாப்பான பயணம் குறித்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், குருகிராமில் போக்குவரத்து இணைக் கமிஷனராக பிரதீக் கெலாட் நியமிக்கப்பட்டார். அவர் பொறுப்பேற்ற பிறகு சாலை விதிகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். அதன்படி, மார்ச் மாதத்தில் மட்டும் போக்குவரத்துக் காவலர் ஒருவர், தலைக் கவசம் அணியாமல் சென்ற 19,603 பேருக்கு அபராதம் விதித்துள்ளார். அதில் ரூ.1.9 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இது குறித்து குருகிராம் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கூறியதாவது: சாலை விதி மீறலில் பெரும்பாலானவை தலைக்கவசம் அணியாமல் செல்வதாகவே உள்ளது. அதைக் கட்டுப்படுத்த இப்போது விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்படுகிறது. பெரும்பாலான விபத்துகளில் உயிரிழப்பு அல்லது காயம் ஏற்படுவதற்கு இருசக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணியாமல் இருப்பதே காரணமாக உள்ளது. சாலைகளில் வாகனங்களை ஓட்டும் போது ஒரு ஒழுங்குமுறை, ஒழுக்கத்தை பின்பற்ற வேண்டும். தற்போது விதிமீறலில் ஈடுபடும் வாகன ஓட்டிகளிடம் அபராதம் வசூலிக்கப்படுகிறது. இது வரும் மாதங்களிலும் தொடரும். அபராதம் மட்டுமே வாகன ஓட்டிகளிடம் மாற்றத்தை கொண்டு வராது.

## "கல்வியறிவு பெற்ற கேரள மக்களை குஜராத் போல ஏமாற்ற முடியாது" - கார்கே பேச்சு



**இடுக்கி, ஏப்.7:**

5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் நாடு முழுவதும் தீவிரமடைந்துள்ளது. இதில் வரும் 9-ம் தேதி அன்று கேரளா, அசாம் மாநிலம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்துக்கு ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதனால் அரசியல் கட்சிகள் இந்தப் பகுதிகளில் மிகத் தீவிர பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை அன்று கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் மல்லிகார்ஜுன கார்கே பேசியது சர்ச்சை ஆகியுள்ளது. அந்த கூட்டத்தில் அவர் பேசியதாவது: கேரள மக்களை தவறாக வழிநடத்தலாம் என எண்ண வேண்டாம்.

அவர்கள் புத்திசாலிகள், கல்வியறிவு பெற்றவர்கள். பிரதமர் மோடியும், முதல்வர் பினராயி விஜயனும் கல்வியறிவு பெறாத குஜராத் அல்லது பிற பகுதியில் உள்ள மக்களை ஏமாற்றலாம். ஆனால், அது கேரள மக்களிடத்தில் முடியாது" என்றார்.

பாஜக கடும் எதிர்வினை: கார்கேவின் இந்த பேச்சுக்கு பாஜக கடுமையாக எதிர்வினையாற்றி உள்ளது. இது தொடர்பாக குஜராத் மாநில துணை முதல்வர் ஹர்ஷ்சிங்விஎக்ஸ்தளத்தில் ட்வீட் செய்துள்ளார். "தேசம் காந்தி, சர்தார் படேலை பெற்றது குஜராத் மண்ணில் இருந்துதான். தேசத்தின் மிகப் பிரபலமான பிரதமரை நரேந்திர மோடியை வழங்கியதும் குஜராத் மண்தான்.

நீங்கள் 6 கோடி குஜராத் மக்களை அவமதித்து உள்ளீர்கள். குஜராத் மீது இவ்வளவு வெறுப்பு ஏன்? மீண்டும் மீண்டும் குஜராத் மக்களை இப்படி இகழ்வது ஏன்? குஜராத் மக்கள் உங்களை ஆட்சி அதிகாரத்தில் இருந்து அகற்றினர்.

அதற்கு இப்படி பழிவாங்குகிறீர்களா? இந்தப் பேச்சு விரக்தி அல்ல. இது உங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது. காங்கிரஸ் கட்சியை குஜராத் மக்கள் புறக்கணித்து வருகின்றனர். அது வருங்காலத்திலும் தொடரும். குஜராத் உங்களை மன்னிக்காது" என அதில் தெரிவித்துள்ளார்.

## தேர்தலையொட்டி ரூ.650 கோடி மதிப்பிலான ரொக்கம், போதைப் பொருள் பறிமுதல்

**புதுடெல்லி, ஏப்.7:**

தமிழகம் உள்ளிட்ட 4 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக கொண்டு செல்லப்பட்ட ரூ.650 கோடி மதிப்பிலான ரொக்கம், போதைப்பொருள் மற்றும் மதுபானங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளதாகத் தேர்தல் ஆணையம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் கூறியுள்ளதாவது: மேற்கு வங்கத்தில் அதிகபட்சமாக ரூ.319 கோடி மதிப்பிலான சட்டவிரோத ரொக்கம், போதைப்பொருள் மற்றும் மதுபானங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து, தமிழகத்தில் ரூ.170 கோடி மதிப்பிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

வாக்காளர்களைக் கவரும் வகையில் விநியோகிக்கப்படவிருந்த சட்டவிரோதப் பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்த ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தேர்தல் முறைகேடுகள் குறித்த புகார்கள் மீது 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்ய 5,173 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

நிலையான கண்காணிப்புக் குழுக்கள்: இது தவிர, மாநிலங்களின் பல்வேறு எல்லைப் பகுதிகளில் திடீர் வாகனத் தணிக்கை மேற்கொள்வதற்காக 5,200-க்கும் மேற்பட்ட நிலையான கண்காணிப்புக் குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கேரளம், அசாம், புதுச்சேரியில் ஏப்ரல் 9-ம் தேதி ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெறுகிறது. தமிழகத்தில் ஏப்ரல் 23-ம் தேதி ஒரே கட்டமாகச் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது.

## ரயில் தண்டவாளங்களில் 18,000 டன் குப்பைகள் அகற்றம்: எம்சிடி தகவல்

**புதுடெல்லி, ஏப்.7:**

தலைநகரில் உள்ள தண்டவாளங்களில் தில்லி மாநகராட்சி மேற்கொண்ட சிறப்பு தூய்மை இயக்கத்தின் மூலம் இதுவரை 18,495 டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது: தலைநகரில் மொத்தம் 102.9 கீ.மீ. நீளமுள்ள ரயில் தண்டவாளங்களில் குப்பைகள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 49.74 கி.மீ. தூரத்துக்கான தூய்மை பணிகள் நிறைவடைந்துள்ளன. ரயில்வே அதிகாரிகளுடன் இணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 123 இடங்களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதுவரை 18,495 டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளன. இதில் கரோல் பாக் மற்றும் கேஷவ்புரம் பகுதிகளில் அதிகப்படியாக 4,100 டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளன. இதில் 550 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு டிப்பர் லாரிகள், ஜேசிபி இயந்திரங்கள் மற்றும் நவீன இயந்திரங்கள் மூலம் குப்பைகள் அகற்றப்பட்டன.

கரோல் பாக் பகுதியில் பெருமளவு குப்பைகளை வெளியேற்ற 20 ரயில் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. மீண்டும் புதிதாக குப்பைகள் கொட்டப்படாமல் தடுக்க ரயில்வே ஓரங்களில் 61 இரட்டை குப்பைத்தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது.

'இந்த இயக்கம் பழைய குப்பை தேக்கங்களை அகற்றுவது மட்டுமின்றி, நீண்டகால தூய்மையை உறுதி செய்ய சிறந்த உள்கட்டமைப்பு மற்றும் பொதுமக்களின் பங்களிப்பை உறுதி செய்ய வலியுறுத்துகிறது' என தில்லி மாநகராட்சி ஆணையர் சஞ்சீவ் கிர்வார் தெரிவித்தார்.




# ஆன்லைனின் வாங்கிய கடனை அடைக்க மூதாட்டியிடம் நகை பறித்த இன்ஜினீயர் கைது



**சென்னை, ஏப்.07:** மடிப்பாக்கத்தைச் சேர்ந்தவர் ஜெயஸ்ரீ (61). கடந்த 29-ம் தேதி மாலை, கர்ப்பிணி மருமகளுடன் வீட்டினருகே திலகர் அவென்யூ 1-வது மெயின் ரோடு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது, பின் தொடர்ந்து வந்த, வழிப்பறி கொள்ளையன் ஜெயஸ்ரீ கழுத்தில் அணிந்திருந்த 2 பவுன் தங்க தாலிச் செயினை பறித்துக் கொண்டு தப்பியோடினார். இது தொடர்பாக அவர் மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். சிசிடிவி கேமரா காட்சிகள் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையில், ஜெயஸ்ரீயிடம் நகை பறிப்பில் ஈடுபட்டது மடிப்பாக்கம், பஜார் மெயின் ரோடு பகுதியைச் சேர்ந்த தமிழ்வாணன் (23) என தெரிய வந்தது.

தலைமறைவாக இருந்த அவரை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

விசாரணையில், கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த தமிழ்வாணன் பொறியியல் படித்து, சென்னையில் தங்கி தனியார் கட்டுமான நிறுவனத்தில் இன்ஜினீயராக வேலை செய்து வருவதும், ஆன்லைனில் வாங்கிய கடனை திரும்ப செலுத்த பணம் தேவைப்பட்டதால், நகைபறிப்பில் ஈடுபட்டதும் தெரிய வந்தது. இதையடுத்து, அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

# எலி மருந்து தடவிய தேங்காயில் சட்னி: 3 பேருக்கு தீவிர சிகிச்சை

**சென்னை, ஏப்.07:** விருகம்பாக்கத்தில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் தோழிகள் 6 பேர் அறை எடுத்து தங்கி படித்து வந்தனர்.

இதை அறியாத 3 பேர் அந்த தேங்காயை பயன்படுத்தி தோசைக்கு சட்னி தயாரித்து சாப்பிட்டுள்ளனர். சிறிது நேரத்தில் அவர்களுக்கு உடல்நல பாதிப்பு ஏற்பட்டது.

அதன் பிறகுதான் தேங்காயில் எலி மருந்து தடவிய தகவல் தெரியவந்தது. 3 பேரும் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

# சென்னை போரூர் அருகே அடுக்குமாடி குடியிருப்பில் நடிகை சுபாஷினி தூக்கிட்டு தற்கொலை





**சென்னை, ஏப்.07:** சென்னை போரூர் அருகே உள்ள பிரபலமான அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் நடிகை சுபாஷினி வசித்துவந்தார். இலங்கையை பூர்வீகமாக கொண்ட இவர் படப்பிடிப்பு காரணமாக அடுக்குமாடி குடியிருப்பிற்கு வந்து தங்கியுள்ளார். அங்கிருந்தபடி ஷூட்டிங்கிற்கு சென்று வந்த சுபாஷினி நேற்று இரவு திடீரென தனது அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது.

நடிகை தற்கொலை செய்து கொண்டதாக தகவல் கிடைத்ததும் விரைந்து வந்த போலீசார் அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், நடிகை சுபாஷினி தற்கொலை செய்து கொண்டாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா? என பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டனர். முதல் கட்ட விசாரணையில் கணவருடன் வீடியோ காலில் பேசிய பிறகு அவர் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. இதனால், குடும்பத்தகராறு காரணமாக ஏற்பட்ட மனஉளைச்சலில் இந்த விபரீத முடிவை எடுத்தாரா? என்றும் போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

பெங்களூரில் கணவருடன் வசித்து வந்த நடிகை சுபாஷினி ஷூட்டிங்கிற்காக வந்த இடத்தில் தற்கொலை செய்து கொண்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நடிகை சுபாஷினி ‘கயல்’ என்ற சின்னத்திரை தொடரில் நடித்து வந்தார். திரைப்படங்களிலும் நடித்துள்ளார். இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைத்தளங்களில் மிகவும் பிரபலமாக இருந்த சுபாஷினி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அவரது ரசிகர்களை சோகம் அடைய வைத்துள்ளது.

# சிதம்பரம் அருகே உள்வாங்கிய தேசிய நெடுஞ்சாலை மேம்பாலம் - மக்கள் அதிர்ச்சி



**கடலூர், ஏப்.07:** விழுப்புரம் - நாகை தேசிய நெடுஞ்சாலை பல கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டது. இந்த சாலையை தினமும் பல வாகனங்கள் கடந்து செல்கின்றன.

இந்த நிலையில், கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே எடுக்கன்காட்டுப்படுகை அடுத்த கொள்ளிடம் ஆற்றுக்கு முன்பாக மேம்பாலம் சுமார் 20 அடி தூரத்திற்கு உள்வாங்கியுள்ளது. நள்ளிரவில் பாலத்தில் ஏற்பட்ட பள்ளத்தை பார்த்த தேசிய நெடுஞ்சாலை துறை ஊழியர்கள் அருகில் இருக்கும் வீடுகளில் உள்ள மக்களை உடனடியாக காலி செய்யும்படி கூறினர். பாலத்தின் அருகே 25 குடும்பங்கள் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், பாலம் தொடர்ந்து உள்வாங்கி வருவதால் போக்குவரத்து முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது. தரம் இல்லாமல் அவசர அவசரமாக அமைக்கப்பட்ட பாலம் என்பதால் தொடர்ந்து சேதம் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 2025-26-ம் நிதியாண்டில் 3,405 பெட்டிகளை தயாரித்து சென்னை ஐசிஎஃப் சாதனை




**சென்னை, ஏப்.07:** ரயில் பெட்டித் தயாரிப்பில் உலகப் புகழ்பெற்ற இணைப்புப் பெட்டி தொழிற்சாலை (ஐ.சி.எஃப்.) பயணிகளின் தேவை மற்றும் காலத்துக்கு ஏற்ப, அதிநவீன ரயில் பெட்டி, சுற்றுலாவுக்கான ரயில் பெட்டி உட்பட 50-க்கும் மேற்பட்ட வகைகளில் 600 வடிவமைப்புகளில் ரயில் பெட்டிகளை தயாரித்து வருகிறது.

இதுதவிர வந்தேபாரத் ரயில், அம்ரித் பாரத் ரயில்களும் தயாரித்து வழங்கப்படுகின்றன. சமீபத்தில் இங்கு 80 ஆயிரமாவது ரயில் பெட்டி தயாரிக்கப்பட்டது. இந்த ஆலையில் 2025-26-ம் நிதியாண்டில் அதிக பெட்டிகள் தயாரித்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஐசிஎஃப் அதிகாரிகள் கூறியதாவது: 2025-26-ம் நிதியாண்டில் மட்டும் 3,405 ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. கடந்த 2024-25-ம் நிதியாண்டில் 3007 ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டன. இதனுடன் ஒப்பிடும்போது தற்போது 13.2 சதவீதம் உற்பத்தி உயர்ந்துள்ளது.

புதிய ரயில் பெட்டிகளில் வந்தே பாரத் தூங்கும் வசதி பெட்டிகள், வந்தே பாரத் ரயிலில் அமரும் நாற்காலி பெட்டிகள், மின்சார மற்றும் மெமு ரயில்களின் குளிர்சாதனப் பெட்டிகள் உள்ளிட்டவை மட்டும் 2,548 பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

22 அம்ரித் பாரத் ரயில்களுக்குரிய பெட்டிகளும் இதில் அடங்கும். கொல்கத்தா மெட்ரோவுக்கு உரிய ரயில் பெட்டிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# எழும்பூரில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெறுவதால் கடற்கரை - செங்கல்பட்டு தடத்தில் 17 ரயில்கள் மாற்றம்



**சென்னை, ஏப்.07:** எழும்பூர் ரயில் நிலையத்தில் மறுசீரமைப்பு பணிகள் காரணமாக, கடற்கரை - செங்கல்பட்டு தடத்தில் 17 மின்சார ரயில்களின் சேவையில் இன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூர் நிலையத்தில் ரூ.735 கோடியில் மறுசீரமைப்பு பணி நடந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக பிரம்மாண்ட நடை மேம்பாலம் அமைக்கும் பணி 10, 11-வது நடைமேடைகளில் தொடங்கப்பட்டது.

இதன் காரணமாக, கடந்த பிப்.19-ம் தேதி முதல் புறநகர் மின்சார ரயில் சேவைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. மின்சார ரயில்கள் 10, 11-க்கு பதிலாக 5, 6-வது நடைமேடைகளில் இயக்கப்பட்டன.

தாம்பரம் - கடற்கரை மார்க்கத்தில் சேத்துப்பட்டில் இருந்து எழும்பூர் செல்லும்போதும், மறுமார்க்கத்தில் பூங்கா ரயில் நிலையத்தில் இருந்து எழும்பூருக்கு செல்லும்போதும் ரயில்கள் மெதுவாக இயக்கப்பட்டன.

தினசரி ரயில் சேவைகள் எண்ணிக்கை 204-ல் இருந்து 115 ஆக குறைக்கப்பட்டது மற்றும் தாமதமான இயக்கம் காரணமாக ஒரு மாதத்துக்கும் மேலாக பயணிகள் கடும் அவதியடைந்தனர். இரவில் பணிகள் இந்த நிலையில், 42 நாட்களுக்குப் பிறகு, புறநகர் மின்சார ரயில்கள் இயக்கம் கடந்த 3-ம் தேதி சீரானது.

வழக்கமான அட்டவணைப்படி, வழக்கம்போல 10, 11-வது நடைமேடைகளில் மின்சார ரயில்கள் இயக்கப்பட்டதால், பயணிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். எனினும், 10, 11-வது நடை மேடைகளில் பணி இன்னும் நிறைவடையவில்லை.

படிக்கட்டுகள், எஸ்கலேட்டர், குடிநீர் வசதிகள் இருந்தபோதிலும், தற்காலிக ஏற்பாடாக ஆங்காங்கு மட்டுமே மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது. சாய்வுதளம் அமைப்பதற்கான பணிகள் இரவில் மேற்கொள்ளப்பட்டு, விரைவில் முடிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக, கடற்கரை-தாம்பரம் இடையே 8 ரயில்களின் சேவை நேற்று மாற்றம் செய்யப்பட்டது. கடற்கரை - செங்கல்பட்டு மார்க்கத்தில் 3 மின்சார ரயில்களும், திருமால்பூர் - கடற்கரை மார்க்கத்தில் ஒரு ரயிலும் பகுதி ரத்து செய்யப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, 17 ரயில்களின் சேவையில் இன்று மாற்றம் செய்யப்பட உள்ளது. அதன்படி, கடற்கரை - தாம்பரத்துக்கு இன்றும், நாளையும் (ஏப்.6, 7) அதிகாலை 5.50, இரவு 11.05, 11.30, 11.59 மணிக்கு இயக்கப்படும் மின்சார ரயில்கள் ரத்து செய்யப்படுகின்றன.

கூடுவாஞ்சேரி - கடற்கரைக்கு இரவு 9.45, 10.10, 11.15 மணிக்கு இயக்கப்படும் மின்சார ரயில்கள், தாம்பரம் - கடற்கரை இடையே பகுதி ரத்து செய்யப்படுகின்றன.

திருமால்பூர் - கடற்கரைக்கு இரவு 8 மணி, செங்கல்பட்டு - கடற்கரைக்கு இரவு 10.20, 11.00 மணிக்கு இயக்கப்படும் மின்சார ரயில்கள், தாம்பரம் - கடற்கரை இடையே பகுதி ரத்து செய்யப்பட உள்ளன.

ஏப். 6, 7, 8-ம் தேதிகளில் கடற்கரை - செங்கல்பட்டுக்கு அதிகாலை 3.50, 4.15 மணிக்கு இயக்கப்படும் மின்சார ரயில்கள், கடற்கரை - தாம்பரம் இடையே பகுதி ரத்து செய்யப்படுகின்றன.

இதுதவிர, 5 மின்சார ரயில்கள் புறப்படும் நேரம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இத்தகவல் சென்னை ரயில்வே கோட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதுகுளத்தூரில் உரிய ஆவணம் இல்லாமல் எடுத்துச் சென்ற ரூ.10 கோடி தங்க, வைர நகைகள் பறிமுதல்



**ராமநாதபுரம், ஏப்.07:** ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தொகுதியில் உரிய ஆவணமின்றி எடுத்துச் சென்ற ரூ.9.47 கோடி மதிப்பிலான தங்க வைர, வெள்ளி நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

முதுகுளத்தூர் தொகுதி தேர்தல் நிலையான கண்காணிப்புக் குழு அலுவலர் ராஜேஸ்வரன் தலைமையிலான பறக்கும் படையினர் சாயல்குடி அருகே கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள கன்னிராஜபுரம் சோதனைச் சாவடியில் சனிக்கிழமை இரவு வாகனத் தணிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது தூத்துக்குடி சாலை வழியாக திருப்பரங்குன்றம் ஹார்விபட்டியைச் சேர்ந்த செல்வகுமார் மகன் ராஜா (36) என்பவர் காரில் வந்தார்.

காரை தேர்தல் பறக்கும் படையினர் சோதனையிட்டதில் 18 பெட்டிகளில் தங்கம், வைரம், வெள்ளி நகைகள் இருந்தன.

விசாரணையில் மதுரையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த நகைகள் என்றும், ஆர்டரின் பேரில் எடுத்துச் செல்வதாகவும் கூறினார்.

ஆனால், உரிய ஆவணங்கள் இல்லாததால் ரூ.9.47 கோடி நகைகள் பறிமுதல் செய்யப்பட்டு முதுகுளத்தூர் துணை வட்டாட்சியர் ராஜ்குமாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

# திருச்சி கல்வி நிறுவனத்தில் வருமானவரி துறையினர் திடீர் சோதனை

**திருச்சி, ஏப்.07:** திருச்சி கல்வி நிறுவனத்தில் வருமானவரித் துறையினர் நேற்று சோதனை நடத்தினர்.

திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் ராஜசேகரன் நடத்தி வரும் திருச்சி-மதுரை தேசிய நெடுஞ்சாலையில் மணிகண்டம் பகுதியில் உள்ள இந்திரா கணேசன் கல்வி நிறுவனத்தில் வருமானவரித் துறை அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர்.

கல்வி நிறுவனத்துக்கு நேற்று மாலை 4.30 மணியளவில் 2 கார்களில் வந்த அதிகாரிகள் தொடர்ந்து சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ராஜசேகரன் நேற்று காலை தனது பிரச்சாரத்தை தொடங்கிய நிலையில், மாலையில் அவருக்கு சொந்தமான கல்வி நிறுவனங்களில் வருமானவரித் துறை அதிகாரிகள் சோதனை நடத்தியது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வெப்பம் தணிந்தது..! சென்னையில் பல்வேறு இடங்களில் பரவலாக மழை



**சென்னை, ஏப்.07:** தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த மாதம் முதலே வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. இதன் காரணமாக பொது மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். இதன் காரணமாக மக்கள் வெளியே செல்வதை குறைத்துக் கொண்டனர். குறிப்பாக மதியம் 12 மணி முதல் மாலை 4 மணி வரை சாலைகள் வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டன.

இதனிடையே, தென்தமிழகம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். விருதுநகர், தேனி, மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களின் மலை பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது. அதற்கேற்றார் போல் ஆங்காங்கே திடீரென கருமேகங்கள் சூழ்வதும், அவ்வப்போது தூறல்கள் போடுவதுமாக இருந்து வந்தது.

இந்நிலையில், சென்னையில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

அந்த வகையில், சுட்டெரிக்கும் கோடை வெயிலை தணிக்கும் வகையில் சென்னையில் பலத்த காற்று, இடியுடன் கூடிய பரவலாக கனமழை பெய்து வருகிறது.

சென்னை எழும்பூர், கீழ்ப்பாக்கம், சேத்துபட்டு, நுங்கம்பாக்கம், புதுப்பேட்டை, ஆயிரம்விளக்கு, ராயப்பேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மிதமான மழை பெய்து வருகிறது.

# வடபழனி முருகன் கோயிலை சுற்றியுள்ள தெருக்களில் நிறுத்தப்படும் வாகனங்களால் மக்கள் கடும் அவதி

**சென்னை, ஏப்.07:** வடபழனி முருகன் கோயிலை சுற்றியுள்ள தெருக்களில் நிறுத்தப்படும் வாகனங்களால் பக்தர்களும் பொது மக்களும் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

சென்னை மாநகரின் மிக முக்கியமான ஆன்மிக அடையாளங்களில் ஒன்றாக திகழ்வது வடபழனி முருகன் கோயில். நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு வந்து தரிசனம் செய்கின்றனர்.

குறிப்பாக, செவ்வாய்க்கிழமை, வார இறுதி நாட்கள் மற்றும் விசேஷ காலங்களில் பக்தர்களின் வருகை பல மடங்கு அதிகரித்து, மாட வீதிகளில் கூட்டம் அலைமோதுகிறது.

கோயிலுக்கு வரும் பக்தர்கள் ஆற்காடு சாலை வழியாக ஆண்டவர் தெருவையும், நூறடி சாலை வழியாக அம்மன் கோயில் தெரு மற்றும் வடக்கு மாட வீதியையும் பிரதான வழிகளாக பயன்படுத்துகின்றனர்.

ஆனால், சமீபகாலமாக இந்தப் பகுதிகளில் திட்டமிடப்படாத வாகன நிறுத்தம் மற்றும் ஆக்கிரமிப்புகள் அதிகரித்துள்ளதால் பக்தர்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

கோயில் நிர்வாகம் சார்பில் நூறடி சாலை அருகே கார் நிறுத்துமிடமும், ஆண்டவர் தெருவில் இருசக்கர வாகன நிறுத்துமிடமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இருப்பினும், பல வாகன ஓட்டிகள் விதிகளுக்குப் புறம்பாக அம்மன் கோயில் தெரு, ஆண்டவர் தெரு மற்றும் மாட வீதிகளிலேயே தங்களது வாகனங்களை நிறுத்திச் செல்கின்றனர்.

இப்பகுதியில் உள்ள கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்களும் தங்களது வாகனங்களை சாலைகளின் குறுக்கே ஆங்காங்கே நிறுத்திவிடுகின்றனர். இதனால், கோயில் நுழைவாயிலுக்கு செல்லும் பக்தர்கள் விபத்து அச்சத்துடனேயே நடக்க வேண்டிய சூழல் நிலவுகிறது.

மேலும், நடைபாதைகளை ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ள கடைகளால் பக்தர்கள் சாலையில்தான் செல்ல வேண்டியுள்ளது.

குறுகலான மாட வீதிகளில் கார்கள் மற்றும் பைக்குகள் அணிவகுத்து நிற்பதால், மற்ற வாகனங்கள் கடந்து செல்ல முடியாமல் மணிக்கணக்கில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

தரிசனத்துக்காக நீண்ட வரிசையில் காத்திருந்து வரும் பக்தர்கள், கோயிலுக்கு வெளியேயும் இத்தகைய நெரிசலில் சிக்கித் தவிப்பது பெரும் மன உளைச்சலை தருகிறது. எனவே, சென்னை மாநகராட்சி, போக்குவரத்து காவல் துறை உள்ளிட்ட துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

மாட வீதிகள் மற்றும் தெருக்களில் உள்ள ஆக்கிரமிப்பு கடைகளை அகற்றுவதோடு, விதிகளை மீறி நிறுத்தப்படும் வாகனங்களின் உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பக்தர்களுக்கு பாதுகாப்பான தரிசனத்தை உறுதி செய்ய வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# 12-ம் வகுப்பு மாணவர்களின் விடைத்தாள் திருத்தும் பணி தொடக்கம்




**சென்னை, ஏப்.07:** பன்னிரெண்டாம் வகுப்பு விடைத்தாள் திருத்தும் பணிகள் இன்று தொடங்க உள்ளதாக அரசுத் தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு மாநிலப்பாடத்திட்டத்தில் படித்து பொதுத்தேர்வு எழுதிய 12-ம் வகுப்பு மாணவர்கள் மற்றும் 11 -ம் வகுப்பு தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கான விடைத்தாள்கள் திருத்தும் பணிகளை இன்று முதல் ஏப்ரல் 20-ஆம் தேதி வரை மேற்கொள்ள அரசுத் தேர்வுகள் இயக்ககம் உத்தரவிட்டுள்ளது.


தமிழ்நாடு மாநிலப் பாடத்திட்டத்தில் படித்த மாணவர்களுக்கான 12-ஆம் வகுப்பு மற்றும் 11-ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கான பொதுத் தேர்வு மார்ச் 2-ஆம் தேதி முதல் மார்ச் 27-ஆம் தேதி வரையில் நடைபெற்றது. இந்தத் தேர்வை எழுதுவதற்கு மாநிலம் முழுவதும் மொத்தம் 7,99,692 மாணவ, மாணவிகள விண்ணப்பித்திருந்தனர்.

12-ஆம் வகுப்பு மற்றும் 11-ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கான பொதுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் பணியை முதன்மை தேர்வாளர் மற்றும் கூர்ந்தாய்வு அலுவலர்கள் இன்று நடைபெறும். அவர்கள் அரசுத் தேர்வு இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள விடைக்குறிப்பில் ஏதேனும் மாற்றம் இருந்தால் தெரிவிக்க வேண்டும்.

அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 7-ஆம் தேதி முதல் 20-ஆம் தேதிக்குள் உதவி தேர்வாளர்களாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் விடைத்தாள்களை திருத்தம் செய்யப்படும். இந்தப் பணிகளை 20-ஆம் தேதிக்குள் முகாம்களில் முடிக்க வேண்டும் எனவும், 12-ம் வகுப்பு தேர்வு முடிவுகள் மே 8-ம் தேதி வெளியிடப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அரசுத் தேர்வுத்துறை இயக்கக அதிகாரி தெரிவித்தார்.



சிந்தாதிரிப்பேட்டை ஸ்ரீ ஆதி கேசவ பெருமாள் கருட சேவை.



காலை மயிலை ஆதி கேசவ பெருமாள் கருட சேவை,

# எம்எஸ்எம்இ நிறுவனங்களுக்கான தேசிய விருதுகளுக்கு விண்ணப்பிக்க அழைப்பு



**சென்னை, ஏப்.07:** குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தேசிய விருதுக்கு தகுதியான தொழில்முனைவோர்கள் வரும் 20-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (எம்எஸ்எம்இ) தேசிய விருதுகள் 2024-க்கான இணையவழி மூலம் விண்ணப்பபிப்பதற்கான செயல் முறையை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகம் அறிவித்துள்ளது.

இந்த மதிப்புமிக்க விருதுகள், பல்வேறு துறைகளில் உள்ள எம்எஸ்எம்இ தொழில்முனைவோரின் சிறப்பான பங்களிப்புகளை அங்கீகரிப்பதையும், இத்துறையில் புதுமை, சிறப்பு மற்றும் வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

இந்த விருதுகள், தொழில்முனைவோரின் தேசிய அளவிலான சிறந்த செயல்பாடுகளை அங்கீகரிப்பதன் மூலம், அவர்களை ஊக்குவிக்கவும், உற்சாகப்படுத்தவும் உதவுகின்றன.

தேசிய எம்எஸ்எம்இ விருதுகளுக்கு, உற்பத்தி, சேவை பிரிவு, ஏற்றுமதி பிரிவு, மகளிர் தொழில்முனைவோர், பட்டியலின, பட்டியல் பழங்குடியின தொழில்முனைவோர், மாற்றுத்திறனாளி தொழில்முனைவோர் உள்ளிட்ட பிரிவுகளிலிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விருதுகளுக்கான விண்ணப்பப் படிவத்தை https://dashboard.msme.gov.in/na/Ent_NA_Admin/Ent_NA_Ent.aspx என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். வரும் 20-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பச் செயல்முறையை எளிதாக்கும் வகையில், சென்னையில் உள்ள எம்எஸ்எம்இ மேம்பாட்டு அலுவலகம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலியில் உள்ள அதன் கிளை அலுவலகங்களுடன் இணைந்து, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வழிகாட்டுதலையும் உதவியையும் வழங்கும். இத்தகவலை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் சூரிய சக்தி மின் உற்பத்தி அதிகரிப்பு: மின் வாரிய அதிகாரிகள் தகவல்



**சென்னை, ஏப்.07:** தமிழகத்தில் சூரிய சக்தி மின் உற்பத்தி அதிகரித்துள்ளதாக மின் வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு மின் வாரியம் சூரிய ஒளி, காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வாயிலாக மின் உற்பத்தி செய்ய முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழகத்தில் தற்போது சூரிய ஒளி மின் நிலையங்களின் உற்பத்தி திறன் 12,352 மெகாவாட்டாகவும், காற்றாலைகளின் திறன் 10 ஆயிரம் மெகாவாட்டாகவும் உள்ளது.

தமிழகத்தின் மின் தேவை தினமும் சராசரியாக 350 மில்லியன் யூனிட்கள் என்ற அளவில் இருக்கும். ஆனால் கோடை காலங்களில் அதிகரித்து காணப்படும். முன்னதாக தமிழகத்தின் அதிகபட்ச மின் நுகர்வு என்பது கடந்த 2024-ம் ஆண்டு ஏப்.30-ம் தேதி 454 மில்லியன் யூனிட்களாக பதிவானது.

இந்த ஆண்டு கோடை காலம் மற்றும் தேர்தல் நடைபெறவுள்ளதால் மின் நுகர்வு உச்சத்தைத் தொடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெயிலின் தாக்கம் அதிகரித்து மின் நுகர்வு அதிகரித்தாலும், சூரிய சக்தி மின் உற்பத்தியும் அதிகரித்துள்ளதாக மின் வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: வெயில் காலம் தொடங்கியது முதல் வீடுகள், அலுவலகங்கள் என அனைத்து பகுதிகளிலும் குளிர்சாதனங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது.

வெயில் அதிகரித்ததால் சூரிய ஒளி மின் உற்பத்தி கடந்த மார்ச் 24-ம் தேதி 54.8 மில்லியன் யூனிட், 27-ம் தேதி 55.6 மில்லியன் யூனிட்களாக இருந்தது.

இதற்கு முன் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 20-ம் தேதி 53.9 மில்லியன் யூனிட்கள் உற்பத்தியே அதிகபட்சமாக இருந்தது. சூரிய சக்தி மின்சாரம் மாநிலத்தின் தற்போதைய மின் தேவையில் 13 சதவீதத்தை பூர்த்தி செய்கிறது. இது வணிக மற்றும் வீட்டு பயன்பாட்டுக்கு தொடர்ந்து மின்சாரம் வழங்கி உதவுகிறது.

கடந்த 2022-ம் ஆண்டு சூரிய சக்தி உற்பத்தி திறன் 5 ஆயிரம் மெகாவாட்டாக இருந்த நிலையில் தற்போது 12 ஆயிரம் மெகாவாட்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பிப்ரவரியில்சூரிய சக்தி வாயிலாக 1,745 மில்லியன் யூனிட்கள் உற்பத்தி செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டுகூடுதலாக 40 மில்லியன் யூனிட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கூறினர்.

# மாமல்லபுரம் கடற்கரையில் கரை ஒதுங்கிய அம்மன் சிலை



**சென்னை, ஏப்.07:** மாமல்லபுரம் கடற்கரையில் நேற்று சுற்றுலா பயணிகள் பலர் கடலில் குளித்து கொண்டிருந்தனர். அப்போது மண்ணில் பாதி புதைந்த நிலையில் 3 அடி உயர அம்மன் சிலை கரை ஒதுங்கியது. 200 கிலோ எடையுள்ள இந்த அம்மன் சிலை, பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் வலது, இடது என 4 கைகளில் முறையே சூலம், உடுக்கை, கத்தி, சிலம்பு வைத்திருக்கின்ற கோலத்தில் காணப்படுகிறது.

நடைபாதை வியாபாரிகள் சிலர் அம்மன் சிலை கரை ஒதுங்கியது குறித்து மாமல்லபுரம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் அங்கு விரைந்து வந்து, மண்ணில் புதைந்து கிடந்த அம்மன் சிலையை தோண்டி எடுத்து நிமிர்த்தி வைத்தனர்.

அந்த சிலையை எடுத்து சென்று விசாரணை நடத்த வருவாய்த்துறையினருக்கு போலீசார் தகவல் தெரிவித்தனர். திருக்கழுக்குன்றம் தாசில்தார் தேவேந்திரன் உத்தரவின்பேரில் மாமல்லபுரம் வருவாய் அலுவலர் புஷ்பராஜ் மற்றும் அதிகாரிகள் விரைந்து வந்து அந்த சிலையை எடுத்து சென்று விசாரணை நடத்தினர்.

இந்த அம்மன் சிலை எப்படி கரை ஒதுங்கியது, இது பழங்கால அம்மன் சிலையா? அல்லது கடற்கரையில் அம்மன் சிலையுடன் பரிகார பூஜை செய்ய வந்து இந்த சிலையை யாராவது கடற்கரையில் விட்டு சென்றார்களா? என்று பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# மின்னல் தாக்கியதால் பனைமரம் தீப்பிடித்தது மாணவர்கள் அதிர்ச்சி



**சேலம், ஏப்.07:** சேலம் அருகே கருப்பூர் பகுதியில் பெரியார் பல்கலைக்கழகம், அரசு என்ஜினீயரிங் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளில் உள்ள விடுதியில் 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கி படித்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் மாலை திடீரென பலத்த காற்றுடன் மழை பெய்தது. அப்போது பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பனை மரங்கள் மீது இடி, மின்னல் தாக்கியதால் பச்சை பனைமரம் தீப்பிடித்து எரிந்தது. இதனை கண்ட பல்கலைக்கழக மாணவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் எந்தவித பாதிப்பு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# அரசுப் பேருந்து எல்இடியில் ‘தமிழக வெற்றிக் கழகம்’ என்ற எழுத்துகள் ஓடியதால் பரபரப்பு




**சென்னை, ஏப்.07:** அரசு பேருந்து ஒன்றில், வழித்தடத்தை அறிவிக்க வைக்கப்பட்டிருந்த டிஜிட்டல் போர்டில், திடீரென தமிழக வெற்றிக் கழகம் என பெயர் ஓடியதால் பயணிகள் அதிர்ச்சியடைந்தனர். TN45 M4853 என்கிற பதிவெண் கொண்ட அரசு பேருந்தில், டிஸ்ப்ளேவில் விஜய்யின் கட்சியின் பெயர் ஓடும் காட்சிகள் அடங்கிய வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவின. பேருந்து எங்கு செல்கிறது, வழித்தடம் என்ன? என்பது ஓடக்கூடிய டிஜிட்டல் போர்டில் தமிழக வெற்றிக்கழகம் என ஓடுவதை பார்த்து அதிர்ச்சி அடைந்த பயணிகளும் குழப்பம் அடைந்தனர்.

இந்த நிலையில், கட்சியின் பெயர் பஸ்சின் டிஜிட்டல் போர்டில் ஓடியது தொடர்பாக தமிழக அரசுபோக்குவரத்து கழகம் விளக்கம் அளித்துள்ளது. இது குறித்து கூறப்பட்டுள்ளதாவது:சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வரும் வீடியோவில் உள்ள பேருந்தானது, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருச்சி மண்டலத்தைச் சேர்ந்த புதிய பேருந்து ஆகும். இப்பேருந்தில் உள்ள மின்னணு வழித்தடப் பலகையில் (Electronic Route Board) சில வாசகங்கள் இடம்பெற்றது குறித்து உடனடி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில், யாரோ அடையாளம் தெரியாத நபர்கள் அந்தப் பேருந்தின் வழித்தடப் பலகையினை இயக்கும் மென்பொருள் பலகையை (Motherboard) ஹேக் (Hack) செய்து, இத்தகைய தவறான வாசகங்களை பதிவிட்டது கண்டறியப்பட்டது.

மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:

இச்சம்பவம் நேற்று கவனத்திற்கு வந்தவுடன், உடனடியாக அந்த மின்னணு பலகையின் மதர்போர்டு (Motherboard) மாற்றப்பட்டு, சரியான வழித்தட விவரங்கள் பதிவேற்றப்பட்டன.

இது போன்ற செயல்கள் இனி நிகழாமல் இருக்கவும், சம்பந்தப்பட்ட நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், மின்னணு பலகை சேவை வழங்கும் நிறுவனத்திற்கு (Service Provider) அறிவுறுத்தப்பட்டுள்ளது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராணிப்பேட்டையில் போட்டியில்லை: திமுக வேட்பாளர் வினோத் காந்தி திடீர் அறிவிப்பு



**சென்னை, ஏப்.07:** தனது தந்தை அமைச்சர் காந்திக்காக, ராணிப்பேட்டை தொகுதியில் போட்டியிடும் முடிவிலிருந்து திமுக வேட்பாளர் வினோத் காந்தி பின்வாங்கியுள்ளார். ராணிப்பேட்டையில் மீண்டும் காந்தியே போட்டியிடுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் அமைச்சர்கள் காந்தி, மனோ தங்கராஜ், கயல்விழி ஆகிய மூவருக்கும் திமுகவில் சீட் மறுக்கப்பட்டது. ஆனால், காந்தியின் மகன் வினோத் காந்தி ராணிப்பேட்டை தொகுதியில் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டது.

தனக்கு சீட் அறிவிக்கப்படாததால், காந்தி அதிருப்தியில் இருந்ததாக சொல்லப்படுகிறது. இதன் காரணமாக, தனது தந்தைக்காக வினோத் காந்தி ராணிப்பேட்டையில் போட்டியிடுவதில் இருந்து பின்வாங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் முகநூலில் வெளியிட்ட பதிவில் , “2026ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் ராணிப்பேட்டை தொகுதியில் போட்டியிடும் அரிய வாய்ப்பை எனக்கு அளித்து, என் மீது நம்பிக்கை வைத்து தேர்ந்தெடுத்த தலைவருக்கும், சகோதரர் உதயநிதி ஸ்டாலினுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், என் தந்தையார் மீண்டும் போட்டியிடும் உறுதியான விருப்பத்தைக் கருத்தில் கொண்டு, இந்த வாய்ப்பை அவருக்கு மரியாதையுடன் மீண்டும் ஒப்படைக்க முடிவு செய்துள்ளேன்.

என்னை உறுதியாக ஆதரித்து, நம்பிக்கை அளித்த அனைத்து ஆதரவாளர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள். இன்னும் நீண்ட வாழ்க்கை முன் உள்ளது என்பதில் உற்சாகத்துடன், சேவை செய்து சாதிக்க நான் உறுதியுடன் இருக்கிறேன்’ எனத் தெரிவித்துள்ளார். ஆனால், இதுகுறித்து திமுக தலைமையில் இருந்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது. இதுவரை 3,430 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், எடப்பாடியில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, தருமபுரியில் சவுமியா அன்புமணி உள்ளிட்டோர் இன்று வேட்புமனு தாக்கல் செய்கின்றனர். மனுக்கள் பரிசீலனை நாளை நடைபெறுகிறது. இறுதி வேட்பாளர் பட்டியல் ஏப்.9-ம் தேதி வெளியாகிறது.

# முதல்வர் மு.க. ஸ்டாலின் மக்களை ஏமாற்றி வருகிறார் - பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன்

**சென்னை, ஏப்.07:** தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் ஞாயிறன்று பேசும் போது, தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மக்களை ஏமாற்றி வருவதாக குற்றம்சாட்டினார்.

மேலும், மே 4-ஆம் தேதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும்போது, அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) 200 இடங்களை வெல்லும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து பேசிய நயினார் நாகேந்திரன், “நாங்கள் (பா.ஜ.க.) 27 இடங்களை வெல்லப் போகிறோம். நாங்கள் மிக சிறப்பாக திட்டமிட்டு, தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்.

இம்முறை, தமிழக NDA கூட்டணி நிச்சயமாக வெற்றி பெறப்போகிறது. நாங்கள் 200 இடங்களுக்கு மேலாகப் பெறுவோம். முதலமைச்சர் ஸ்டாலின் எப்போதும் பொய் மட்டுமே பேசுகிறார். அவர் தமிழக மக்களை பணத்தின் மூலம் ஏமாற்றி வருகிறார்,” என்றார்.

முன்னதாக மத்திய அமைச்சரும், பாரதிய ஜனதா கட்சியின் (BJP) தமிழக தேர்தல் பொறுப்பாளருமான பியூஷ் கோயல் பேசும் போது, “தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) மாபெரும் வெற்றி பெற்று, தமிழகத்தில் அடுத்த ஆட்சி அமைக்கும் என்று முழு நம்பிக்கை உள்ளது,” என்றார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM